Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

தமிழ் Mirror
www.tamilmirror.lk
TUESDAY JANUARY 04, 2022

செவ்வாய்க்கிழமை ஜனவரி 04, 2022 | ஒளி: 07 கதிர்: 196 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ | FREE

## வெள்ளத்தில் தவறிவிழுந்த விவசாயி மாயம்

■ வி.சுகிர்தகுமார், கனகராஜா சரவணன்

அம்பாறை, ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள பட்டிமேடு வடக்கு வயற்பகுதியான பள்ளப்பாமாங்கையில் ஏற்பட்ட வெள்ளத்தில், தவறி விழுந்த விவசாயி, காணாமற் போயுள்ளார்.


சம்பவம் இன்று திங்கட்கிழமை காலையில் இடம்பெற்றுள்ளதாக கோளாவில் பொலிஸார் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2



புதிய சட்டம் வரும்வரை

# சின்னத் தேர்தலை நடத்த முடியாது



- சட்டமூலம் தவறான முறையில் நிறைவேற்றப்பட்டுள்ளதால் வாபஸ் பெற வேண்டும்
- எந்த நேரத்திலும் அமைச்சரவையை மாற்றும் திறமை ஜனாதிபதிக்கு உண்டு

புதிய சட்டம் கொண்டுவரப்படும் வரை மாகாண சபைத் தேர்தலை நடத்த முடியாது என தேர்தல் சட்ட மறுசீரமைப்பு தொடர்பாக நியமிக்கப்பட்ட பாராளுமன்ற தெரிவுக்குழுவின் தலைவரும் அமைச்சருமான தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

நாங்கள் வேண்டாம் என்று கூறும்போது மக்கள் விடுதலை முன்னணி, தமிழ்த் தேசிய கூட்டமைப்பு போன்ற அரசியல் கட்சிகள் தவறான சட்டத்தைக் கொண்டு வந்ததாகவும் அதில் பல புதிய திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டுமென உயர்நீதிமன்றம் தமக்கு அறிவித்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2

## 100 மில்லி மீற்றர் மழை பெய்யலாம்

ஏழு மாவட்டங்களில் கடுமையான மழை பெய்யக்கூடுமென வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளதென அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

பலதரப்பட்ட தரவுகளைக் கொண்ட

## டிஜிட்டல் அடையாள அட்டை அறிமுகம்

சர்வதேச அளவில் அங்கிகரிக்கப்பட்ட 'பிளக்செயின்' தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, 15 வயதுக்கும் 30 வயதுக்கும் இடைப்பட்ட நபர்களுக்கான 'டிஜிட்டல் அடையாள அட்டை' தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால், நேற்று (03) அறிமுகப்படுத்தப்பட்டது.

இளைஞர்களின் திறன்கள், கல்வி, தொழில்முறை தகுதிகள் உள்ளிட்ட பலதரப்பட்ட தரவுகளைக் கொண்ட தரவுத்தளமாகப் பயன்படுத்தக்கூடிய 'டிஜிட்டல் அடையாள அட்டை' அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தலைவரும் பணிப்பாளர் நாயகம் தமித விக்ரமசிங்க தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

பண்டிகை விபத்துகளில்

## 86 பேர் பலி



நாடளாவிய ரீதியில், கடந்த 25ஆம் திகதி கிறிஸ்மஸ் பண்டிகை தினத்திலிருந்து புத்தாண்டுக்கு அடுத்த தினமான 2ஆம் திகதிவரை இடம்பெற்ற விபத்துகளில் 86 பேர் உயிரிழந்துள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## ரஞ்சனுக்காக புதிய போராட்டம்



ஊழல் மற்றும் அநீதிக்கு எதிராக எப்போதும் போராடும் மனிதாபிமானமிக்க மக்கள் பிரதிநிதியான ரஞ்சன் ராமநாயக்கவுக்கு, சகல ஜனநாயக உரிமைகளுடனும் கூடிய சுதந்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்கான போராட்டம் புதிய வடிவில் இந்த வருடம் ஆரம்பிக்கப்படுமென தெரிவித்த எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ, அவரின் நிலையைப் பார்க்கும் போது, மிகுந்த கவலையளிப்பதாகத் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## பிரதமர் இராஜினாமா செய்தி பொய்யாகும்



பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, பிரதமர் பதவியிலிருந்து இராஜினாமா செய்யவுள்ளார் என்ற செய்தி சமூக வலைத்தளங்களிலும் ஊடகங்களிலும் வெளியாகியுள்ளன.

சில நாளகளுக்கு முன்னரும் இன்றையதினமும் இவ்வாறான செய்திகள் வெளிவந்துள்ளன. அந்தச் செய்தியில் எவ்விதமான உண்மையும் இல்லையென பிரதம அமைச்சின் அலுவலகம் ஊடக அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

பிரதமர் இராஜினாமா என்ற செய்தியில் எவ்விதமான உண்மையும் இல்லையென பிரதமரின் ஊடகச் செயலாளர் ரொஹான் வெலிவிட்ட தெரிவித்துள்ளார்.

## தங்கம் விலை எகிறியது



தங்க வர்த்தக சந்தையில் ஒரு பவுண் தங்கத்தின் விலை 5 ஆயிரம் ரூபாவினால் அதிகரித்துள்ளது. செட்டியார் தெரு உள்ளிட்ட இலங்கை சந்தையில் 22 கரட் தங்கம் ஒரு பவுண் 112,500 ரூபாவுக்கும் 24 கரட் தங்கம் ஒரு பவுண் 121,500க்கும் விற்பனை செய்யப்படுகின்றது. உலக தங்க சந்தையில், ஒரு அவுன்ஸ் தங்கம் 1,818 ஐக்கிய அமெரிக்க டொலருக்கு விற்பனை செய்யப்படுகின்றது. கடந்த ஒரு மாதத்துக்குள் 11 டொலர்களால் அதிகரித்துள்ளது.

தொடர்ச்சி P2

## தனி முஸ்லிம் கூட்டணி போலியான செய்தி

### ஹரீஸ் எம்.பி விளக்கம்

■ நூருல் ஹுதா உமர்



ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் 07 பாராளுமன்ற உறுப்பினர்கள் இணைந்து, தனியான முஸ்லிம் கூட்டணியை உருவாக்கத் தீர்மானித்துள்ளனர் என்ற செய்தி போலியான செய்தி என பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் தெரிவித்தார்.

சில ஊடகங்களில் வெளியாகியுள்ள முஸ்லிம் எம்.பிக்கள் தொடர்பான செய்திகள் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தொடர்ச்சி P2

## 200ஆவது கொடியேற்றம்

கல்முனை கடற்கரைப் பள்ளிவாசல் நாகூர் ஆண்டகை தர்ஹாவின் 200ஆவது வருடாந்த கொடியேற்ற விழா, இன்று (04) ஆரம்பமாகி, தொடர்ச்சியாக 12 நாள்கள் இடம்பெறவுள்ளது.

இக் கொடியேற்ற விழா, அரச வர்த்தமானி பத்திரிகை மூலம் தேசிய கலாசார விழாவாக அங்கிகரிக்கப்பட்டுள்ளதுடன், விழாவையொட்டி முத்திரை ஒன்றும் வெளியிடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, கொவிட் -19 சுகாதார நடைமுறைகளை பின்பற்றி, பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்குமாறு, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஜீ.சுகுணன் மற்றும் கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி ஏ.ஆர்.எம். அஸ்மி ஆகியோர் கேட்டுள்ளனர்.

(படம்: பாறூக் ஷிஹான்)



நெருக்கடிகளுக்கு தீர்வுகாண

## மீயுயர்சபையை உடன் கூட்டவும்

### அரசாங்கத்திடம் கிரியெல்ல கோரிக்கை

நாட்டில் நிலவும் பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்கு உடனடியாக பாராளுமன்றத்தைக் கூட்டுமாறு ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கத்திடம் கோரிக்கை விடுப்பதாக எதிர்க்கட்சியின் பிரதம கொறடாவும் பாராளுமன்ற உறுப்பினருமான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

பாதுகாவலரின் துப்பாக்கி ரவை

## பெண் ஊழியரின் இடுப்பை துளைத்தது

குருநாகல், நாரம்மலயிலுள்ள அரச வங்கி ஒன்றின் பாதுகாவலரின் கையிலிருந்த துப்பாக்கி வெடித்ததில் வங்கியில் பணியாற்றிய பெண் ஊழியர் ஒருவர் காயமடைந்துள்ளதாக நாரம்மல பொலிஸார் தெரிவித்தனர்.

நாக்காவத்தை அலுத்வெவ பிரதேசத்தில் வசிக்கும் 20 வயதுடைய வங்கி ஊழியர் ஒருவரே இவ்வாறு காயமடைந்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

தொடர்ச்சி P2

தடுப்பூசி திட்டம் வெற்றிகரம்

## நாட்டில் ஒமிக்ரான் அலைக்கு இடமில்லை



நாட்டில் ஒமிக்ரான் அலை பரவும் என்பதை நம்பமுடியாது என்று ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் ஒவ்வாமை, நோயெதிர்ப்பு மற்றும் உயிரியல் துறையின் தலைவர் கலாநிதி சந்திம ஜீவந்தர தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## முட்டை, கோழி இறைச்சி விலையில் சரிவு

டிசெம்பர் மாத நடுப்பகுதியில் 30 ரூபாயைத் தாண்டிய முட்டையின் விலையும் அதிகரித்துக் காணப்பட்ட கோழி இறைச்சியின் விலையும் சற்று குறைந்துள்ளதாக வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

முட்டையின் சில்லறை விலை தற்போது 22 முதல் 24 ரூபாய் வரையிலும், மொத்த விற்பனை விலை 20 முதல் 22 ரூபாய்

தொடர்ச்சி P2

## பிள்ளைகளை நிர்வாணமாக்கி மிளகாய்த்தூள் பூசி சித்திரவதை

### தந்தை கைது: பிள்ளைகள் மீட்பு

■ எஸ்.சதீஸ்



தனது இரண்டு பிள்ளைகளையும் நிர்வாணமாக்கி, மிளகாய்தூள் பூசி, ஒரேமரத்தில் கட்டிவைத்து அடித்து துன்புறுத்தி, சித்திரவதை செய்த குற்றச்சாட்டின் கீழ், அவ்விரு பிள்ளைகளின் தந்தை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஹட்டன், குடாகம, சமகி மாவத்தையைச் சேர்ந்தவரே ஹட்டன் பொலிஸாரால் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். நேற்று முன்தினம் (02) மீட்கப்பட்ட 6 வயதான மகன், 7 வயதான மகள், ஆகிய இருவரும் டிக்கோயா- கிளங்கன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# சின்னத் தேர்தலை நடத்த முடியாது



இந்தச் சட்டமூலம் தவறான முறையில் நிறைவேற்றப்பட்டுள்ளதாகவும், சட்டத்தை முழுமையாக வாபஸ் பெற வேண்டும் எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் தயாராக இருப்பதாகவும், புதிய சட்டம் உருவாக்கப்பட்ட பின்னர் தேர்தல் நடத்தப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

எதிர்காலத்தில் அமைச்சரவையில் மாற்றம் செய்யப்படுமா என வினவியதற்கு பதிலளித்த அமைச்சர் தினேஷ் குணவர்தன, எந்த நேரத்திலும் அமைச்சரவையை மாற்றும் அதிகாரமும் திறமையும் ஜனாதிபதிக்கு இருப்பதாகத் தெரிவித்தார்.

# வெள்ளத்தில் தவறிவிழுந்த விவசாயி மாயம்

புளியம்பத்தை கிராமத்தைச் சேர்ந்த 56 வயதுடைய கணபதி கிருபைராஜன் என்பவரே இவ்வாறு இன்று (03) காணாமல் போயுள்ளார் எனத் தெரிவித்த கோளாவில் பொலிஸார், அவரை தேடும் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றனர்.

வெள்ள நீர் வாய்க்காலில் நிரம்பியுள்ளது. அந்த வாய்க்காலின் துரிசில் இருந்த பலகையை அகற்ற முற்பட்டபோதே அவர், தவறி துரிசிலின் கீழே விழுந்து, வெள்ளநீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளார்.

இந்நிலையில், கடுமையான மழை பெய்துவருவதால் அந்த வயல்கள், வாய்க்கால்கள் நிரம்பி வெள்ளக்காடாக காட்சியளிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# 86 பேர் பலி

நேற்று முன்தினம் (02) இடம்பெற்ற வீதி விபத்துக்களில் 15 பேர் உயிரிழந்து உள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர்களில் 12 பேர், 02ஆம் திகதி இடம்பெற்ற விபத்துகளில் உயிரிழந்துள்ளதாகவும் ஏனைய மூவர் முன்னைய வீதி விபத்துகளை அடுத்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு உயிரிழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

புத்தாண்டு தினத்தன்று (01) இடம்பெற்ற விபத்துகளில் 18 பேர் உயிரிழந்திருந்த நிலையில், பண்டிகைக் காலத்தில் டிசெம்பர் 25ஆம் திகதி முதல் நேற்றுமுன்தினம் (02) வரை இடம்பெற்ற வீதி விபத்துகளில் 86 பேர் உயிரிழந்துள்ளனர்.

சாரதிகளின் கவனயீனம் காரணமாகவே இந்த விபத்துகள் அனைத்தும் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# ரஞ்சனுக்காக புதிய போராட்டம்

வெலிக்கடை சிறையில் சிறை வைக்கப்பட்டுள்ள முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவை, நேற்று (03) பார்வையிட சென்ற போதே, ஊடகங்களிடம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், ரஞ்சன் ராமநாயக்க போன்ற மனிதாபிமானமிக்க ஒருவர் சிறையில் இருக்க வேண்டிய ஒருவர் இல்லை. நாட்டின் இன்றைய சவால்மிக்க சூழ்நிலையில் பொதுமக்களுடன் கைகோர்த்து இணைந்திருக்க வேண்டிய நபர் என்றார்.

இந்தப் போராட்டத்துக்காக ஐக்கிய மக்கள் சக்தி முழுமையான அர்ப்பணிப்புடன் இருப்பதாகவும் தமது கட்சியின் இளம் உறுப்பினர்களின் பங்கேற்புடன் அந்தப் போராட்டம் ஆரம்பிக்கப்படும் என்றும் குறிப்பிட்டார்.

ரஞ்சன் ராமநாயக்கவின் விடுதலைக்காக தாம் பலமுறை ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்ததாகத் தெரிவித்த அவர், இவ்வாறு கோரிக்கை விடுக்கப்பட்ட பல சந்தர்ப்பங்களில் தனக்கு வாய்மொழியாக சாதகமான பதில்கள் கிடைத்ததாகவும் தெரிவித்தார்.



எனவே, மனிதாபிமானமிக்க மக்கள் பிரதிநிதியான ரஞ்சன் ராமநாயக்கவை, ஜனநாயக ரீதியில் முழுமையாக விடுதலை செய்யுமாறு ஜனாதிபதியிடம் மீண்டும் கோரிக்கை விடுக்கின்றேன் என தெரிவித்த அவர், அவரது விடுதலை தொடர்பில் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு சாதகமான பதில் வாய்மூலம் கிடைத்தாலும் அதை செயல் மூலம் செயற்படுத்தப்படவில்லை என்றார்.

# 100 மில்லி மீற்றர் மழை பெய்யலாம்

இன்று (04) காலை 9 மணிவரையிலும் இந்தச் சீரற்ற வானிலை தொடருமென எச்சரிக்கை விடுத்துள்ளது. இந்த வானிலை நேற்று (03) பகல் 12.30 மணிக்கு ஆரம்பித்துள்ளது.

வடகிழக்கு பருவப்பெயர்ச்சி மழை தீவிரமடைவதால், நாட்டின் கிழக்குப் பகுதியில் கடும் மழை பெய்யக்கூடுமென எதிர்பார்க்கப்படுவதாக திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஊவா மாகாணத்திலும் மட்டக்களப்பு, அம்பாறை, மாத்தளை, பொலன்னறுவை ஆகிய மாவட்டங்களிலும் 100 மில்லி மீற்றர் மழையை எதிர்பார்க்கலாம் என்றும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# டிஜிட்டல் அடையாள அட்டை அறிமுகம்

டிஜிட்டல் அடையாள அட்டையானது, அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்களின் பணியாளர் தேவைகளைப் பூர்த்தி செய்யும் தரவு வங்கியாக பயன்படுத்தப்படுவதோடு, இளைஞர்களுக்கு நேரடி வேலை வாய்ப்புகளை வழங்குவதற்கான கருவியாகப் பயன்படுத்த முடியும் எனவும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தலைவர் தெரிவித்தார். சர்வதேச அளவில் அங்கிகரிக்கப்பட்ட 'பிளக்செயின்' தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திய குறித்த 'டிஜிட்டல் அடையாள அட்டை' ஒரு தகவல் தொழில்நுட்பக் கருவியாக உருவாக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்த அடையாள அட்டை அறிமுகப்படுத்தும் நிகழ்வு, பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில், நேற்று (03) இடம்பெற்றது.

# மீயுயர்சபையை உடன் கூட்டவும்

கொழும்பு மார்க்ஸ் பெர்னாண்டோ மாவத்தையில் உள்ள எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று (03) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் தெரிவித்த அவர், பாராளுமன்றத்தை மூடுவதற்குப் பதிலாக, கூட்டத் தொடர்களை அதிகரித்து, நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நாட்டின் பிரச்சினைகளுக்கு அரசாங்கம் தீர்வு காண வேண்டும் என்று தெரிவித்தார்.

பாராளுமன்றத்தின் பதவிக்காலம் நிறைவடைந்துள்ள நிலையில் நாட்டின் பிரச்சினைகளை மக்களிடம் இருந்து மறைக்க முடியாது எனவும், அரசாங்கம் இந்த வாரத்தில் பாராளுமன்றத்தை உடனடியாக கூட்டி மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

# தனி முஸ்லிம் கூட்டணி போலியான செய்தி

"வடக்கு, கிழக்கு இணைப்பை உறுதிப்படுத்தும் 13ஆம் திருத்தம் தொடர்பில் தமிழ்க் கட்சிகள் பேச்சுவார்த்தைகளை செய்துவரும் இந்நிலையில், அதற்கு எதிராக வடக்கு, கிழக்கை சேர்ந்த முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறார்கள்.

"எனவே, இந்த ஒப்பந்தத்தை செய்யவிடாமல் தடுத்துவிடுவார்கள் என்ற அச்சத்தின் காரணமாக, முஸ்லிம் மக்களை திசை திருப்பும் நோக்கிலும், இந்த முஸ்லிம் எம்.பிக்களின் நம்பகத்தன்மையை கேள்விக்கு உட்படுத்துவதற்காகவும் இவ்வாறான போலி செய்தியை வெளியிட்டு, மக்களைக் குழப்புகின்றனர்.

"புதிய கூட்டணியை அமைப்பது பற்றியோ அல்லது மொட்டுடன் கூட்டணியை அமைத்து இணைவது தொடர்பிலோ, அரசாங்கத்தில் நேரடியாக இணைந்து அமைச்சர் பதவிகள் பெறுவது பற்றியோ கற்பனையில் கூட நாங்கள் நினைக்கவில்லை.



"இது தொடர்பில் நாங்கள் எவ்வித பேச்சுவார்த்தைகளையோ, ஆலோசனைகளையோ, நடவடிக்கைகளையோ எடுக்கவில்லை.

"நான் தொடர்ந்தும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியிலேயே பயணிப்பதில் உறுதியாக இருக்கிறேன். ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸைப் பலப்படுத்தி, சமூக விடயங்களில் தொடர்ந்தும் கரிசனையுடன் செயற்படுவதில் உறுதியாக இருக்கும் நான், இவ்வாறான போலியான செய்திகளைப் பற்றி அலட்டிக்கொள்ளப் போவதில்லை" என்றார்.

# தங்கம் விலை...

இலங்கையை பொறுத்தவரையில் கடந்த டிசெம்பர் மாதத்தில் 22 கரட் தங்கம் ஒரு பவுண் 107,800 ரூபாயுக்கும் 24 பவுண் தங்கம் ஒரு பவுண் 116,500 ரூபாயுக்கும் விற்பனை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# நாட்டில் ஒமிக்ரான் அலைக்கு இடமில்லை

தடுப்பூசி திட்டம் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்படுவதால் அவ்வாறானதொரு நிலை ஏற்படாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

இருப்பினும், ஒமிக்ரானைப் போக்குவதற்கு, பூஸ்டர் டோஸை விரைவில் பெறுவது முக்கியம் என்று தெரிவித்த அவர், சுகாதார விதிமுறைகளைத் தொடர்ந்து பின்பற்ற வேண்டும் என்றும் சுட்டிக்காட்டினார்.

பல பகுதிகளில் கொரோனா வைரஸின் ஒமேகா 3 விவகாரத்தால் பலர் பாதிக்கப்பட்டுள்ளதாக ஊடக அறிக்கைகள் தெரிவிக்கின்ற போதிலும் தமது பிரிவில் கண்டறியப்பட்ட 41 பேரில் ஒருவரேனும் புதிய தொற்றாளர்கள் அல்ல என்றும் தற்போது இலங்கையில் 45 ஒமிக்ரான் நோயாளர்கள் மாத்திரமே பதிவாகியுள்ளதாக அவர் கோடிட்டுக்காட்டினார்.

இதேவேளை, ஒமிக்ரான் நோய்த் தொற்றுகளைக் கண்டறிவதற்கான மற்றொரு சுற்று சோதனை அடுத்த வார ஆரம்பத்தில் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதற்கான மாதிரிகள் சேகரிக்கப்பட்டு வருவதாகவும் கூறினார்.

மரபணு வரிசைமுறைக்காக 176 சந்தேகத்துக்கிடமான மாதிரிகளை பரிசோதித்ததன் மூலம் 41 ஒமிக்ரான் நோய்த்தொற்றாளர்களை ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் ஒவ்வாமை, நோயெதிர்ப்பு மற்றும் உயிரியல் பிரிவு முன்னர் அடையாளம் கண்டது.

இதேவேளை, மரபணு வரிசை பரிசோதனைகளை வெற்றிகரமாக மேற்கொள்வதற்காக ஆய்வுப் பிரிவின் வசதிகள் விரிவுபடுத்தப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# முட்டை, கோழி இறைச்சி விலையில் சரிவு

வரை குறைந்துள்ளதாகவும் முட்டை உற்பத்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, 750 ரூபாயாக இருந்த ஒரு கிலோ கிராம் கோழி இறைச்சியின் விலை 700 மற்றும் 690 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டு வருவதாகவும் கோழிப்பண்ணை உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அதன்படி, ஒரு கிலோ கிராம் கோழி இறைச்சியின் விலை 50 தொடக்கம் 60 ரூபாய் வரை குறைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

> **ஒரு கிலோ கிராம் கோழி இறைச்சியின் விலை 50 தொடக்கம் 60 ரூபாய் வரை குறைந்துள்ளது**

கால்நடை தீனி தட்டுப்பாடு மற்றும் இறக்குமதி நெருக்கடிகள் காரணமாக நவம்பர் மாதம் முதல் முட்டை விலை உயர்ந்ததாகவும் கிறிஸ்மஸ் தினத்தில் முட்டையின் தேவை அதிகமாக இருந்ததால் முட்டை விலை 30 ரூபாய்க்கு மேல் உயர்வடைந்ததாகவும் முட்டை உற்பத்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

கிறிஸ்மஸ் பண்டிகையையொட்டி பல்பொருள் அங்காடிகளில் முட்டை ஒன்றின் விலை 35 ரூபாய்க்கு மேல் விற்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# பெண் ஊழியரின் இடுப்பை துளைத்தது

வங்கி திறக்கப்பட்ட போது பாதுகாப்பு உத்தியோகத்தரின் கையிலிருந்த துப்பாக்கி வெடித்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர். பாதிக்கப்பட்ட பெண்ணின் இடுப்பில் காயம் ஏற்பட்டதையடுத்து, சிகிச்சைகளுக்காக அவர் குருநாகல் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# பிள்ளைகளை நிர்வாணமாக்கி மிளகாய்த்தூள் பூசி சித்திரவதை

ஹட்டன்- டிக்கோயா நகர சபையில் சுகாதாரப் பணியாளராக கடமையாற்றி வந்ததாகவும் மதுவுக்கு அடிமையான அவர், மனைவி மற்றும் பிள்ளைகளை தொடர்ந்தும் சித்திரவதைக்கு உள்ளாக்கி வருபவரென தெரிவிக்கப்படுகின்றது.

சில பொருட்களை வாங்கிவருமாறு பணம் கொடுத்து, இவ்விரு பிள்ளைகளையும் வீட்டுக்கு அருகிலுள்ள கடைக்கு அனுப்பியுள்ளார். தான் கூறியதற்கு மேதிகமாக விறகு கட்டையொன்றையும் அப்பிள்ளைகள் வாங்கிவந்துள்ளனர். இதனால் ஆத்திரமடைந்த தந்தை, பிள்ளைகளை இவ்வாறு துன்புறுத்தியுள்ளார்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்தே, பிள்ளைகள் மீட்கப்பட்டுள்ளனர். தந்தையும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்நிலையில், கணவனின் சித்திரவதையைத் தாங்கிக்கொள்ள முடியாத மனைவி, கணவரிடம் இருந்து விவாகரத்து கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரை ஹட்டன் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவித்த ஹட்டன் பொலிஸார், சிறுவர்கள் தொடர்பில் நீதிமன்றத்தின் அறிவுறுத்தலின் பிரகாரம் மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும் என்றனர்.

> **சில பொருட்களை வாங்கி வருமாறு, வீட்டுக்கு அருகிலுள்ள கடைக்கு பிள்ளைகளை அனுப்பியுள்ளார். மேதிகமாக விறகு கட்டையை பிள்ளைகள் வாங்கிவந்ததால் ஆத்திரமடைந்த தந்தை, பிள்ளைகளை இவ்வாறு துன்புறுத்தியுள்ளார்**



ரணில், சஜித், மைத்திரி கட்சிகளுடன்

# ஒருபோதும் கூட்டணி இல்லை

## கே.டி லால்காந்த தெரிவித்தார்

ஐக்கிய தேசிய கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, அரசாங்கத்திலிருந்து எதிர்காலத்தில் வெளியேறப்போகிறவர்கள் என எந்தக் கட்சியுடனும், தேசிய மக்கள் சக்தி கூட்டணிகளை அமைக்காதென மக்கள் விடுதலை முன்னணியின் அரசியல் குழு உறுப்பினர் கே.டி லால்காந்த தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசிய கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி ஆகிய கட்சிகள் மீது மக்கள் நம்பிக்கை இழந்துள்ளதாலேயே, தேசிய மக்கள்



சக்தியின் பின்னால் மக்கள் அணிதிரண்டு வருகின்றனர்.

இவ்வாறான நிலையில் தேசிய மக்கள் சக்தியும் இந்தக் கட்சிகளுடன் சென்று கூட்டணி வைத்தால், மக்களுக்கு வேறு வழியில்லாது சென்றுவிடும். மக்கள் அதனை விரும்பவும் மாட்டார்கள். மேற்குறித்த கட்சிகளைக் கைவிட்டு மக்கள் எங்களது கட்சிக்கு வருவார்களாக இருந்தால நாம் எதற்கு மக்கள் கைவிட்ட கட்சிகளுடன் கூட்டணி அமைக்க வேண்டும் எனவும் வினவினார்.

எவ்வாறாயினும் இக்கட்சிகளில் உள்ள முற்போக்கு சிந்தனைகளைக் கொண்டவர்கள் எமது கட்சியில் இணைத்துகொள்ளத் தயாராக இருக்கிறார்கள். அவர்களுக்கு நாம் அழைப்பும் விடுப்பதோடு, வருபவர்கள் தொடர்பில் முழுமையாக ஆராய்ந்த பின்னரே நாம் கட்சிக்குள் அவர்களை இணைத்துகொள்வோம் என்றார்.

# கஞ்சா, துப்பாக்கிகளுடன் மூவர் கைது

உள்நாட்டு துப்பாக்கிகளுடன் இருவரும், கஞ்சா செடிகளை வளர்த்த ஒருவரும் பொலிஸாரால் நேற்று முன்தினம் (02) கைது செய்யப்பட்டுள்ளார்.

புத்தளம் பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்குக் கிடைத்த தகவல்களின் அடிப்படையில், புத்தளம், கல்லடி பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் உள்நாட்டு தயாரிப்பு துப்பாக்கி, அதற்குப் பயன்படுத்தக்கூடிய 18 ரவைகளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

புத்தளத்தைச் சேர்ந்த 40 வயதுடைய நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதோடு, மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, உள்நாட்டு தயாரிப்புத் துப்பாக்கியுடன் முள்ளிக்குளம் பிரதேசத்தில் ஒருவர் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மொனராகலை, அமுனுலந்த பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் கஞ்சா செடிகளை வளர்த்தவர் கைது செய்யப்பட்டுள்ளார். 6 பேர்ச் நிலத்தில் இரண்டரை அடி உயரத்தில் இந்த கஞ்சா செடிகளை சந்தேகநபர் வளர்த்துவந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மூன்று வாரங்களில்

# தட்டுப்பாடுகள் நீங்கும்

## லாஃப் நிறுவன தலைவர் அறிவிப்பு

லாஃப் காஸ் சிலிண்டர்களுக்கான தட்டுப்பாடுகள் எதிர்வரும் மூன்று வாரங்களில் நீங்குமென லாஃப் நிறுவனத்தின் தலைவர் டபிள்யூ.கே.எச். வேகபிடிய தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர், நாளாந்தம் 40,000 - 50,000 வரையிலான சிலிண்டர்கள் சந்தைக்கு விநியோகிக்கப்பட்டு வந்தன. எனினும், சிலிண்டர்களை விநியோகிக்கும்போது பின்பற்ற வேண்டிய சில பரிந்துரைகளை நீதிமன்றமும் அரசாங்கமும் வழங்கியுள்ளது. இதனால் எரிவாயுகளை நிரப்பி சிலிண்டர்களை சந்தைகளுக்கு விநியோகிப்பது குறைவடைந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

எவ்வாறாயினும் நாளாந்தம் 10,000 - 15,000 வரையில் சிலிண்டர்கள் சந்தைகளுக்கு விநியோகிக்கப்படுகின்றன. எதிர்வரும் மூன்றுவாரங்களுக்குள் காஸ் சிலிண்டர்களுக்கான தட்டுப்பாடுகள் நீங்கும்.

ஹம்பாந்தோட்டை துறைமுகத்திலிருந்து சிலிண்டர்களை எடுப்பதற்கு கடன்கூற்று கடிதங்களை வங்கிகள் வழங்க வேண்டும். நாட்டில் டொலர் தட்டுப்பாடு பிரச்சினை இருப்பதால் இதில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. எமக்கு டொலர்களை பெற்றுகொடுத்தால் 24 மணித்தியாலங்களுக்குள் சிலிண்டர்களை விநியோகிக்கு முடியும் என்றார்.



# வரிசைகளுக்கு கொரோனாவே காரணம்

அத்தியாவசியப் பொருட்களுக்கு தட்டுப்பாடுகள் நிலவுவதாலேயே நாட்டு மக்கள் வரிசைகளில் நிற்பதாக தெரிவித்த வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன, வரிசைகளுக்குக் கொரோனா வைரஸே காரணமெனவும் தெரிவித்துள்ளார்.



இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அமைச்சர், எரிவாயு, எரிபொருள் உள்ளிட்ட பொருள்களுக்கு மக்கள் வரிசையில் நிற்கிறார்கள். இதில் ஓர் ஒற்றுமை இருக்கிறது. தட்டுப்பாடு நிலவுவதாலேயே மக்கள் வரிசையில் நிற்கிறார்கள்.

தட்டுப்பாடுகளுக்கு உற்பத்தி குறைந்துள்ளமையே காரணமாகும். எனவே, தட்டுப்பாடுகளை நீக்குவதற்கு உற்பத்திகளில் விரைவாக ஈடுபடுவதே தீர்வாக அமையும். எனவே, உற்பத்திகளை அதிகரிக்க வேண்டும்.

உற்பத்தி வேலைத்திட்டங்களில் ஜனாதிபதியால் ஈடுபட முடியாதுபோனமைக்கு கொரோனா வைரஸே காரணம். துறைமுகங்கள், விமான நிலையங்களை மூடுவது என்பது உற்பத்திகளின் வீழ்ச்சியையே குறிக்கும் எனவும் தெரிவித்தார்.







# ஐயப்ப பஜனை

ஒருகொடவத்தை- அவிசாவளை வீதி மஜீத் பிளேஸிலுள்ள அருள்மிகு ஸ்ரீ துர்க்கா காளியம்மன் மணிகண்டன் தீர்த்த யாத்திரை குழுவின் வருடாந்த ஸ்ரீ ஐப்பான் பஜனை ஆலய பிரதம குரு சிவஸ்ரீ சிவகுமார் குருக்கள் தலைமையில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.



# முதலை தாக்கியதில் சுழியோடி மரணம்



தெஹிவளை கடலில் நீந்திக்கொண்டிருந்த போது, முதலை தாக்குதலுக்கு உள்ளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த 58 வயதான நபரொருவர் நேற்று (03) மரணமடைந்தார்.

படுகாயமடைந்த நிலையில் களுபோவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நபரே இவ்வாறு மரணமடைந்துள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

# இ.போ.ச பஸ்கள் அதிகரிக்கும்



அரச ஊழியர்கள் அனைவரும் பணிக்கு திரும்புவதாலும், பாடசாலைகள் மீள ஆரம்பிக்கப்படுவதாலும் சேவையில் ஈடுபடுத்தப்படும் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ்களின் எண்ணிக்கையை அதிகரிக்கப்பட்டுள்ளன.

தற்போது சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள பஸ்களின் எண்ணிக்கையை 5,200ஆக அதிகரிக்க எதிர்பார்த்துள்ளதாக இலங்கை போக்குவரத்து சபையின் பிரதிப் பொதுமுகாமையாளர் பண்டுக ஸ்வர்னஹன்ச தெரிவித்துள்ளார்.

தற்போது 4,200 பஸ்கள் சேவையில் ஈடுபடுவதாகவும், அதில் பல பஸ்கள் பழுதடைந்துள்ளதாகவும் அவற்றைத் திருத்தியமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

பாதுகாப்பு அமைச்சின்

# இணைய நூலகம் அறிமுகம்

பாதுகாப்பு அமைச்சு அதன் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.defence.lk இல் இணைய நூலக வசதியை அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்த இணைய நூலகத்தைப் பயன்படுத்தி தங்கள் அறிவை மேம்படுத்த விரும்புவோருக்கு பல்வேறு துறைசார்ந்த புத்தகங்களின் இணைய பதிப்புகள் இலவசமாகக் கிடைக்க வழிசெய்யப்பட்டுள்ளதாகவும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தத் தனித்துவமான திட்டமானது, பாதுகாப்புத் துறையில் முதன்முறையாக, அறிவு சேகரிப்புக்கான தகவல் மூலங்களை விரிவுபடுத்துவதற்கான ஓர் இணையம் மூலமான தளத்தை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளதாகவும், இது மக்களைப் புரிந்துகொள்வதற்கும் தொடர்பு கொள்வதற்கும் சிவில் / இராணுவ ஈடுபாட்டிற்கும் சிறந்த மக்களை உருவாக்க உதவுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

www.defence.lk/publication/e_book_cat எனும் இணைப்பின் மூலம் புத்தகங்களின் இணைய பதிப்புக்களை தரவிறக்கம் செய்துகொள்ள முடியும்.

இந்த இலவச வசதியை அனைவரும் இணையதளத்துக்குச் சென்று பார்வையிடவும், பயன்படுத்த வேண்டும் எனவும் பாதுகாப்பு அமைச்சு கேட்டுக்கொண்டுள்ளது.

# புதுவருடமும் சவால் மிக்கதாக அமையும்

நாட்டுக்காக உரிய கடமைகளையும் பொறுப்புகளையும் நிறைவேற்றுவதற்கு அனைவரும் ஒன்றிணைய வேண்டுமென தெரிவிக்கும் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, புதுவருடமும் சவால் மிக்கதாக அமையும் எனவும் தெரிவித்தார்.



பாராளுமன்ற வளாகத்தில் நடைபெற்ற, 2022ஆம் ஆண்டுக்கான அரச ஊழியர்கள் சத்தியப்பிரமாணம், உறுதியுரை எடுத்துக்கொள்ளும் நிகழ்வு சபாநாயகர் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது, பாராளுமன்ற பிரதான நுழைவாயிலின் வாசல் படிகளுக்கு அருகில் அமைக்கப்பட்டுள்ள கொடிக்கம்பத்தில் தேசிய கொடியையும் சபாநாயகர் ஏற்றி வைத்தார்.

அதன் பின்னர் பாராளுமன்றத்தின் அனைத்துப் பணியாளர்களும் அரசசேவை உறுதியுரை / சத்தியப்பிரமாணம் எடுத்துக்கொண்டனர்.

அதனைத் தொடர்ந்து நாட்டுக்காக உயிர்நீத்த படைவீரர்கள் உள்ளிட்டவர்களுக்கு இரண்டு நிமிடங்கள் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதன்பின்னர் நிகழ்வில் உரையாற்றிய சபாநாயகர், கடந்த இரண்டு வருடங்களில் நாடு பல சவால்களுக்கு முகங்கொடுத்திருந்தது. புதிய ஆண்டும் சவால் மிக்கதாக அமையும். நாட்டில் காணப்படும் சவால்களை வெற்றிகொள்வதற்குத் தேவையான ஆதரவை வழங்குவதற்கு அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டுமெனவும் தெரிவித்தார்.

# தட்டுப்பாடு இருக்கும் வரையில் வரிசை இருக்கும்

அத்தியாவசியப் பொருட்களுக்கான தட்டுப்பாடுகள் ஒரு மாதத்துக்குள் நீங்குமெனத் தெரிவித்த அமைச்சர் வாசுதேவ நாணயக்கார, அத்தியாவசியப் பொருள்களுக்கான தட்டுப்பாடுகள் காணப்படும் வரையில் மக்கள் வரிசையில் நிற்க வேண்டி வருமெனவும் தெரிவித்தார்.

அத்தியாவசியப் பொருட்களுக்கு தட்டுப்பாடுகள் நிலவும் வரையில் வரிசைகள் தொடரும். பொருள்களுக்கான தட்டுப்பாடுகள் விரைவில் சரி செய்யப்படும். காஸ் சிலிண்டர்கள் தட்டுப்பாடு 10 அல்லது 15 நாள்களுக்குள், மண்ணெண் ணைக்கான தட்டுப்பாடு ஒரு மாதத்துக்குள் சரி செய்யப்படும்.

நாட்டு மக்கள் வரிசைகளில் நிற்பதாகவும், நாட்டு மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படாவிட்டால் பதவிகளிலிருந்து விலகப்போவதாகக் கூறும் அமைச்சர்கள் எவரும், பதவிகளில் இருந்து விலகப்போவதில்லை.

மக்கள் பாரிய பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கிறார்கள் என்பதை ஏற்றுக்கொண்ட அமைச்சர் வாசு, பிரச்சினைகளுக்கு கொரோனா வைரஸே காரணமென்றார்.

இதேவேளை, நாட்டு மக்கள் வரிசையில் நிற்கும்போது உங்களுக்குக் கவலையில்லையா? என ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர், கவலைதான். காஸ் சிலிண்டருக்காக வரிசையில் நிற்கும் மக்களிடத்தில் சென்று அந்த சிலிண்டர்களை தூக்கிக்கொண்டு நிற்பதால் பிரச்சினை தீர்ந்துவிடுமா? ஒரு மாதத்துக்குள் பிரச்சினைகள் அனைத்தும் தீர்க்கப்படும் எனவும் தெரிவித்தார்.

# கிழக்கில் பலத்த மழை

## மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்பு

நூருல் ஹுதா உமர், ரீ.எல்.ஜவ்பர்கான், வ.சக்தி, க.விஜயரெத்தினம்



கிழக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாகப் பெய்துவரும் பலத்த மழை காரணமாக மாவட்டத்தின் தாழ் நிலப் பிரதேசங்களில் வெள்ள நிலைமை ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக, மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் நேற்று முன்தினம் (02) நள்ளிரவு முதல் பலத்த மழை பெய்து வருவதால் வெள்ள நிலைமை ஏற்பட்டுள்ளதுடன், மக்களின் இயல்பு வாழ்க்கையும் முற்றாகப் பாதிப்படைந்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று (03) காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் 54.8 மில்லி மீற்றர் மழை பதிவாகியுள்ளதாக மாவட்ட வானிலை அவதான நிலைய பொறுப்பதிகாரி எஸ்.ரமேஸ் தெரிவித்தார்.

இதனால், புதிய காத்தான்குடி, ஆரையம்பதி, நாவற்குடா, வாகரை, கொக்கொடிச்சோலை உட்பட பல இடங்களில் வெள்ளநீர் தேங்கியுள்ளது.

மாவட்டத்திலுள்ள சிறிய குளங்கள் நிரம்பியுள்ளதுடன் பெரிய குளங்களின் நீர் மட்டமும் வெகுவாக உயர்ந்துள்ளன. 31 அடி கொள்ளளவுடைய நவகிரி குளத்தின் நீர் மட்டம் 26 அடி 4 அங்குலமாகவும், 17 அடி 25 அங்குலம் கொள்ளளவுடைய தும்பங்கேணிக் குளத்தின் நீர்மட்டம் 15 அடி 2 அங்குலமாகவும் உயர்ந்துள்ளது.

மேலும், மட்டக்களப்பு மாவட்டத்தில் பல உள் வீதிகளிலும் வெள்ள நீர் தேங்கியுள்ளதால் போக்குவரத்துகளிலும் மக்கள் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

அதேவேளை, அம்பாறையில் நேற்று 58.4 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

பெரும்பாலும் மழையுடனான இந்த வானிலை, பொத்துவில், கல்முனை, மட்டக்களப்பு, திருகோணமலை, முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார் போன்ற பகுதிகளில் இன்றும் (04) நாளையும் (05) நிலவுமென வானிலை அவதான நிலையம் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.











### சத்தியப்பிரமாணம்...

2022ஆம் ஆண்டு புதுவருட அரச கடமைகளை ஆரம்பித்தல் மற்றும் சத்தியப்பிரமாண நிகழ்வுகள், கிழக்கு மாகாணத்திலுள்ள அரச அலுவலகங்களில் நேற்று (03) நடைபெற்றன.

இதன்படி, திருகோணமலை மாவட்டச் செயலகம், தம்பலகாமம் பிரதேச செயலகம், கிண்ணியா வலயக் கல்வி அலுவலகம், காரைதீவு பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம், தென்கிழக்கு பல்கலைக்கழகம் உள்ளிட்ட அலுவலகங்களில் நடைபெற்ற சத்தியப்பிரமாண நிகழ்வுகளில் அரச உத்தியோகத்தர்கள் பலர் கலந்துகொண்டனர்.

(படங்கள்: கிழக்கு மாகாண நிருபர்கள்)

கிழக்கு மாகாண

## மேலதிக கல்வி பணிப்பாளர் நியமனம்

றீ.ஷான் அஹமட்



கிழக்கு மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளராக மூதூரைச் சேர்ந்த எம்.எம்.ஜவாத் (நளீமி) பதவியுயர்வு பெற்றுள்ளார்.

இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் I ஐ சேர்ந்த எம்.எம். ஜவாத், கிழக்கு மாகாண கல்வி அமைச்சு செயலாளரால் 2021.12.31 திகதிய EP/3/1/B/PF/SLEAS/23 கடிதத்துக்கமைவாக 2022.01.01 அன்று முதல் செயற்படும் வண்ணம் கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளாராக (APD) பதவி உயர்வு பெற்றுள்ளார்.

இவர், கடந்த ஒரு வருட காலமாக கிழக்கு மாகாணத்தின் கல்வி திணைக்களத்தின் கல்வி தர நிர்ணயத்துக்கான மாகாண பிரதிக் கல்விப் பணிப்பாளாராக செயற்பட்டுள்ளார்.

கல்முனை மாநகர சபையின்

## பிரதி ஆணையாளராக அஸீம் கடமையேற்பு

அஸ்லம் எஸ்.மௌலானா

கல்முனை மாநகர சபையின் பிரதி ஆணையாளராக நியமிக்கப்பட்டுள்ள ஏ.எஸ்.எம்.அஸீம், மாநகர மேயர் ஏ.எம்.றகீப் முன்னிலையில், தனது கடமைகளை நேற்று (03) பொறுப்பேற்றார்.

இந்நிகழ்வில் மாநகர சபையின் பிரதி மேயர் றஹ்மத் மன்சூர், ஆணையாளர் எம்.சி.அன்சார், கணக்காளர் ஏ.எச். தஸ்தீக், பிரதம சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் அர்ஷாத் காரியப்பர், பொறியியலாளர் ஏ.ஜே. எச்.ஜௌஸி, ஆயுர்வேத வைத்திய அதிகாரி நந்தினி பவான், வேலைகள் அத்தியட்சகர் வி.உதயகுமரன், நிர்வாக உத்தியோகத்தர் ஏ.எம்.ஆரிப், தொழில்நுட்ப உத்தியோகத்தர் எம். அமீர், சுகாதாரப் பிரிவு முகாமைத்துவ உத்தியோகத்தர் யூ.எம்.இஸ்ஹாக் உள்ளிட்டோர் பங்கேற்றிருந்தனர்.

2019ஆம் ஆண்டு இலங்கை நிர்வாக சேவைக்கு தெரிவு செய்யப்பட்ட ஏ.எஸ்.எம்.அஸீம், 2020 மார்ச் மாதம் தொடக்கம் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் உதவிச் செயலாளராக கடமையாற்றி வந்த நிலையில், மாகாண சபையின் பிரதம செயலாளரால் இப்புதிய பதவிக்கு நியமிக்கப்பட்டிருக்கிறார்.



# கூட்டு ஆவணம் கைச்சாத்திடப்படும்

எஸ்.தில்லைநாதன்



இந்தியாவுக்கு அனுப்பவுள்ள கூட்டு ஆவணம் கைச்சாத்திடப்படும் என்பதில் எந்த விவாதமும் இல்லை என்று, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், நேற்று முன்தினம் (2) தெரிவித்தார்.

அந்த ஆவணம் தொடர்பிலான செயற்பாடுகள் இன்னும் ஓரிரு தினங்களில் நிறைவடையும் எனத் தாம் எதிர்பார்ப்பதாகவும், அவர் கூறினார்.

இது தொடர்பில் தொடர்ந்துரைத்த அவர், தமிழ், முஸ்லிம் மக்களின் ஒற்றுமை மிகவும் முக்கியமானது என்பதால் அரசியல் கோரிக்கைகளை முன்வைக்கும் போது அது தொடர்பில் அதிக கரிசனை செலுத்துகிறோம்.

வடக்கு, கிழக்கில் முஸ்லிம் மக்களுக்கு சம உரிமை வழங்கப்பட வேண்டும் என்பதில் நாம் உறுதியாக இருக்கின்றோம். முஸ்லிம் மக்களின் சகல விடயங்களும் ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டு, இந்தச் செயல்பாடு முன்னெடுக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

விபத்தில்

## மோட்டார் சைக்கிள் சேதம்

எஸ். நிதர்ஷன்



யாழ்ப்பாண வளைவுக்கு அருகில் நேற்று (3) இடம்பெற்ற டிப்பர் - மோட்டார் சைக்கிள் விபத்தில், மோட்டார் சைக்கிள் முற்றாக சேதமடைந்துள்ளது.

நல்லூர் - செம்மணி வீதி ஊடாக வந்த மோட்டார் சைக்கிள் , யாழ்ப்பாணம் - கண்டி நெடுஞ்சாலையில் ஏறமுற்பட்ட போது, யாழில் இருந்து வந்த டிப்பர் வாகனம் மோதியதில், குறித்த விபத்து சம்பவித்தது.

குறித்த விபத்தில் மோட்டார் சைக்கிள் ஓட்டுனர் சிறு காயங்களுக்கு உள்ளானார்.

## 12 நாள்களேயான சிசு திடீர் உயிரிழப்பு

எம்.றொசாந்த்

பிறந்து 31 நாள்களேயான பெண் சிசு திடீர் சுகவீனத்தால் உயிரிழந்துள்ளது.

கோப்பாய் - கோண்டாவில் வீதியை சேர்ந்த க.பிரகவி என்ற பெண் சிசுவே, இவ்வாறு உயிரிழந்துள்ளது. நேற்று முன்தினம் (2) மாலை, திடீரென சோர்வாகக் காணப்பட்ட சிசுவை, பெற்றோர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதித்திருந்தனர்.

எனினும், ஒரு மணி நேரத்தில் சிசு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளது.

இந்நிலையில் திடீர் மரண விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மரண விசாரணைகளை மேற்கொண்டதுடன், உடற்கூற்று பரிசோதனைக்கும் உத்தரவிட்டார்.

கிளிநொச்சி மாவட்டத்தில்

## முதல் முறையாக படகு, நீச்சல் போட்டி

மு.தமிழ்ச்செல்வன்

கிளிநொச்சி, அக்கராயன் குளத்தில், புதுவருட பிறப்பை முன்னிட்டு, படகு போட்டி மற்றும் நீச்சல் போட்டிகளை அக்கராயனகுளம் மீனவர் சங்கத்தினர் ஏற்பாடு செய்து நடத்தியிருந்தனர்.

அக்கராயன் குளத்தில், நன்னீர் மீன்பிடி தொழிலில் ஈடுபடுபவர்கள் இந்தப் படகு போட்டியில் கொட்டும் மழையிலும் ஆர்வத்துடன் பங்குபற்றியிருந்தனர்.

இதனை தொடர்ந்து, நீச்சல் போட்டியும் இடம்பெற்றது குளத்தின் நடுப்பகுதியை அண்மித்த பகுதியில் ஆரம்பித்த போட்டியானது, குளத்தின் கரையில் முடிவடைந்தது.

பின்னர் இவ்விரு போட்டிகளிலும் வெற்றிப்பெற்ற போட்டியாளர்களுக்கு பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன.

### கடமைகள் ஆரம்பம்...

2022ஆம் ஆண்டுக்கான கடமைகளை ஆரம்பிக்கும் நிகழ்வு, நேற்றைய தினம் (3), வடக்கின் அரச நிறுவனங்கள், நீதிமன்றங்களில் நடைபெற்றது. (படப்பிடிப்பு: வடமாகாண நிருபர்கள்)











அரச பதவிகளில் ஏற்பட்டுள்ள வெற்றிடங்களுக்கு

# தமிழ் பட்டதாரிகளை நியமிக்கவும்

## அரவிந்தகுமார் எம்.பி ஜனாதிபதிக்கு கடிதம்

■ எம். செல்வராஜா

அரசாங்கத்தால் 50 ஆயிரம் பட்டதாரிகளுக்கு அரச தொழில் வாய்ப்புகள் வழங்கப்பட்ட போதிலும், அவர்களில் பலர் அரச தொழில் வாய்ப்புகளை நிராகரித்து விட்டு, வெளியேறியுள்ளனர். ஆகையால், ஏற்பட்டிருக்கும் வெற்றிடங்களுக்கு புதியவர்களை நியமிக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அ. அரவிந்தகுமார் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷவுக்கு அனுப்பியுள்ள கடிதமொன்றிலேயே, மேற்கண்ட கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர், 50 ஆயிரம் பட்டதாரிகளுக்கு அரசாங்கம் தொழில்வாய்ப்புகளை வழங்கியது. ஆனால், அவர்களில் பலர் அந்தத் தொழில் வாய்ப்புகளை நிராகரித்துள்ளனர். இந்நிலையில், ஏற்பட்ட வெற்றிடங்கள் இன்னும் பூர்த்தி செய்யப்படவில்லையென்று அறிகின்றேன்.

2020ஆம் ஆண்டு ஜனவரி முதல், ஏப்ரல் வரையிலான காலப்பகுதியில் பல்கலைக்கழகங்களிலிருந்து வெளியேறிய பட்டதாரிகள் பலர் இருக்கின்றனர். அவர்களில் சிலர், 50 ஆயிரம் பட்டதாரிகளின் அரச நியமனங்களை நிராகரித்துள்ளனர். அந்த வெற்றிடங்களுக்கே தமிழ் பட்டதாரிகளை நியமிக்குமாறு கேட்டுள்ளனர்.

பதுளை மாவட்டத்தில் தமிழ் மக்கள் செறிவாக வாழ்ந்து வருகின்ற போதிலும், அவர்களின் அரச சேவைகளை நிறைவேற்றிக்கொள்ள, தமிழ் அரச உத்தியோகத்தர்களின் பற்றாக்குறை இருந்து வருவதால், தமிழ் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளனர்.

ஆகையால், பட்டதாரிகளுக்கான அரச நியமனங்களில் ஏற்பட்டிருக்கும் வெற்றிடங்களுக்கு தமிழ்ப்பட்டதாரி இளைஞர், யுவதிகளை நியமிக்கும் பட்சத்தில் அவர்களுக்கு தொழில் வாய்ப்புகள் கிடைக்கும் அதேவேளை, தமிழ் மக்கள் எதிர்நோக்கும் மொழி புரியாத பிரச்சினைகளுக்கும், தீர்வுகளை ஏற்படுத்தக்கூடியதாக இருக்கும். ஆகவே இது விடயத்தினை தங்களின் மேலான கவனத்திற்கு கொண்டு வருகின்றேன் என்றும் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.



நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஓட்டோ

## அதிகாலை எரிந்து நாசம்

■ ராமு தனராஜா




பசறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கமேவெல கம்மான பகுதியில் ஓட்டோவொன்று தீப்பிடித்து எரிந்து முற்றாக சேதமடைந்துள்ளது.

குறித்த ஓட்டோ கமேவெல கம்மான பகுதிக்கு செல்லும் வீதியில், ஓரமாக நேற்று முன்தினம் (1) இரவு நிறுத்திவிட்டு ஓட்டோ சாரதி அவரது வீட்டுக்குச் சென்றுள்ளார்.

நேற்று (3) அதிகாலை 3 மணியளவில் ஓட்டோ நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இடத்துக்கு முன்பாக அமைந்துள்ள வீட்டின் உரிமையாளர் வெளியே வந்து பார்த்த போது, ஓட்டோ தீப்பற்றி எரிந்ததாகவும், இதனையடுத்து, அவர் சத்தமிட்டு ஓட்டோவின் உரிமையாளரை வரவழைத்துள்ளார்.

இதனையடுத்து அயலவர்களால் தீயை அணைக்க எடுத்த முயற்சிகள் தோல்வியடைந்ததுடன், ஓட்டோ முற்றாக எரிந்து சேதமடைந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பசறை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

தோட்ட களஞ்சியசாலையிலிருந்து

## கவரவிலவில் 197 உர மூடைகள் மாயம்

■ சுதத். எச்.எம்.ஹேவா

ஹொரணை பெருந்தோட்ட நிறுவனத்துக்குரிய மஸ்கெலியா, கவரவில தோட்டத்தின் உர களஞ்சியசாலையிலிருந்து 11 இலட்சம் பெறுமதியான யூரியா உரம் 197 மூடைகள் காணாமல் போனமை தொடர்பில் மஸ்கெலியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 3ஆம் திகதி களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த உரமூடைகள் தொடர்பான இறுதி கணக்கெடுப்பு முன்னெடுக்கப்பட்ட போதே, உர மூடைகள் காணாமல் போனமை தெரியவந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

> “ டிசெம்பர் மாதம் 3ஆம் திகதி களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த உரமூடைகள் தொடர்பான இறுதிக் கணக்கெடுப்பு முன்னெடுக்கப்பட்ட போதே, உர மூடைகள் காணாமல் போனமை தெரியவந்துள்ளது

இந்த விடயம் தொடர்பில் குறித்த தோட்ட நிர்வாகத்தால் மஸ்கெலியா பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய, ஹட்டன் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி விஜித்த அல்விஸின் ஆலோசனைக்கமைய விரிவான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.





நவீனமயப்படுத்தப்பட்ட

## இயந்திர உபகரண அதிகார சபை திறந்து வைப்பு

■ சிவாணி ஸ்ரீ

சப்ரகமுவ மாகாண அபிவிருத்தி நிர்மாண மற்றும் இயந்திர உபகரண அதிகார சபை நவீன முறையில் மாற்றி அமைக்கப்பட்டு திறந்த வைக்கப்பட்டது.

சப்ரகமுவ மாகாண அபிவிருத்தி நிர்மாண மற்றும் இயந்திர உபகரண அதிகார சபையின் பத்தாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, சப்ரகமுவ மாகாண சபையின் மூலம் 180 இலட்சம் ரூபாய் செலவில் மேற்படி அதிகார சபை, சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ தலைமையில் திறந்து வைக்கபட்டது.

மேற்படி சப்ரகமுவ மாகாண அபிவிருத்தி நிர்மாண மற்றும் இயந்திர உபகரண அதிகார சபை வளாகத்தில் வாகனம் திருத்தும் வேலைத்தளம், வாகன சேவை மையம், அச்சகம் என்பன நவீன முறையில் அபிவிருத்தி செய்யப்பட்டு நேற்று முன்தினம்(29) திறந்து வைக்கப்பட்டது.

அத்துடன் மேற்படி அதிகார சபையின் www.decma.sg.gov.lk என்ற பெயரில் இணையத்தளமும் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

குறித்த அதிகார சபையின் மூலம், வாகனம் திருத்தும் வேலைத்தளம், வாகன சேவை மையம், அச்சகம், கட்டடங்கள், வீதிகள் அபிவிருத்தி செய்தல், கட்டடங்கள் அமைப்பதற்கான தேவையான ஆலோசனை, பொருட்கள் என்பன பெற்று கொடுத்தல், வாகனங்களுக்கு தேவையான பெட்டரி மற்றும் டயர் உட்பட வாகனத்திற்கு தேவையான அனைத்துப் பொருட்களும் பெற்று கொடுத்தல், வாகனம் பழுதுபார்த்தல் உட்பட ஏனைய பயிற்சிகளை வழங்குதல் உள்ளிட்ட மேலும் பல சேவைகளை செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

கிளங்கன் வைத்தியசாலையில் வெளி நோயாளர்

## ஆரம்ப பரிசோதனை பிரிவு திறந்து வைப்பு

■ கே.சுந்தரலிங்கம்

இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானின், நிதி ஒதுக்கீட்டில், டிக்கோயா-கிளங்கன் ஆதார வைத்தியசாலையில் 22 மில்லியன் ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்ட வெளி நோயாளர் ஆரம்ப பரிசோதனை பிரிவு, நோர்வூட் பிரதேச சபையின் தவிசாளர், கே.கே.ரவி தலைமையில் நேற்று (03) திறந்து வைக்கப்பட்டது.

டிக்கோயா வெளிநோயாளர் பிரிவுக்கு வரும் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு காரணமாகவும், வைத்தியசாலையில் தங்கியிருந்து சிக்சைப் பெற்றுக்கொள்பவர்களின் வசதி கருதியும் குறித்த பிரிவு நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம், நோயாளர்களின் நோய் மற்றும் பரிசோதனை முடிவுகள் விரைவாக முன்னெடுக்கப்படும் என்பதுடன், இதனால் வீணான கால தாமதத்தைத் தவிர்த்துக்கொள்ள முடியும் என்றும் வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

## கௌரவிப்பு விழா

■ கே.சுந்தரலிங்கம்

2021ஆம் ஆண்டுக்கான அரச விருது வழங்கும் விழாவில், மலையகத்தில் புகழ்பெ ற்ற எழுத்தாளரும், முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினருமான மு.சிவலிங்கத்துக்கு 'சாகித்திய ரத்னா' அரச உயர் இலக்கிய விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

குறித்த விருதைப் பெற்று மலையகத்திற்கு பெருமை தேடித்தந்தமைக்காக, அவரை கௌரவப்படுத்தும் கௌரவிப்பு விழா கொட்டகலை ஆர் டி.எம். வரவேற்பு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் (02) மாலை நடைபெற்றது.

சமூக அபிவிருத்தி தாபனம் மற்றும் கொட்டகலை சிவில் அமைப்பு ஆகியன இணைந்து ஒழுங்கு செய்த இந்நிகழ்வுக்கு, கல்வி அமைச்சின் பெருந்தோட்ட பிரிவுக்கான பணிப்பாளரும் எழுத்தாளருமான சு.முரளிதரன், முன்னாள் கோட்டக் கல்விப்பணிப்பாளர் பாலசுந்தரம், கொட்டகலை ஆசிரிய பயிற்சி கலாசாலையின் அதிபர் திருமதி சந்திரலேகா கிங்ஸ்லி உட்பட எழுத்தாளர்கள், சமூக ஆர்வலர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



## சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்தனர்



ஹேலீஸ் கம்பனியின் கீழ் இயங்கும், நானுஓயா –சமர்செட் ஈஸ்டல் தோட்டத் தொழிலாளர்கள், நேற்று (3) சம்பிரதாய பூர்வமாக தங்களது தொழிலை ஆரம்பித்தனர். இதன்போது தோட்ட அதிகாரி கோசல விஜேசேகர, அத்தோட்ட தலைமை வெளிக்கள உத்தியோகத்தர் வசந்த யாப்பா பண்டார ஆகியோரால் தேயிலை கொழுந்து பறிக்கப்பட்டு, தொழிலாளர்களின் கைகளில் கொடுக்கப்பட்டு சம்பிரதாய பூர்வமாக தொழிலாளர்கள் தொழிலை ஆரம்பித்தனர். (பி. கேதீஸ்)





சிவனடியை தரிசிக்கச் சென்றவர்

## தனக்குத் தானே தீயை மூட்டிக்கொண்டார்

■ காமினி பண்டார

சிவனொளிபாதமலை யாத்திரைக்குச் சென்ற நபர் ஒருவர், நேற்று (3) அதிகாலை, பஸ் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இடத்தில், தனக்குத் தானே தீயை வைத்துக்கொண்டதாகவும், இதனையடுத்து அவர் டிக்கோயா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நபர், கடவத்தையைச் சேர்ந்த 40 வயதுடைய நபர் என தெரியவந்துள்ளது.

குறித்த நபர் மேலும் சிலருடன், சிவனொளிபாதமலை யாத்திரைக்குச் சென்றிருந்த நிலையில், நேற்று அதிகாலை அவர்கள் பயணித்த பஸ்ஸுக்குச் சென்ற அவர், அங்கு பஸ்ஸில் இருந்த மண்ணெண்ணெயை உடலில் ஊற்றி தீவைத்துக்கொண்டுள்ளார்.

உடனடியாக இவர் 1990 அம்பியூலன்ஸ் மூலம் மஸ்கெலியா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட போதும், மேலதிக சிகிச்சைக்காக டிக்கோயா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். குடும்ப தகராறே இந்த சம்பவத்துக்கு காரணமாகும்.

சிவனடியை தரிசிக்கச் சென்றவர்

## தனக்குத் தானே தீயை மூட்டிக்கொண்டார்

■ காமினி பண்டார

சிவனொளிபாதமலை யாத்திரைக்குச் சென்ற நபர் ஒருவர், நேற்று (3) அதிகாலை, பஸ் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இடத்தில், தனக்குத் தானே தீயை வைத்துக்கொண்டதாகவும், இதனையடுத்து அவர் டிக்கோயா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் நல்லதண்ணி பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நபர், கடவத்தையைச் சேர்ந்த 40 வயதுடைய நபர் என தெரியவந்துள்ளது.

குறித்த நபர் மேலும் சிலருடன், சிவனொளிபாதமலை யாத்திரைக்குச் சென்றிருந்த நிலையில், நேற்று அதிகாலை அவர்கள் பயணித்த பஸ்ஸுக்குச் சென்ற அவர், அங்கு பஸ்ஸில் இருந்த மண்ணெண்ணெயை உடலில் ஊற்றி தீவைத்துக்கொண்டுள்ளார்.

உடனடியாக இவர் 1990 அம்பியூலன்ஸ் மூலம் மஸ்கெலியா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட போதும், மேலதிக சிகிச்சைக்காக டிக்கோயா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக தெரிவித்த பொலிஸார், குடும்ப தகராறே இந்த சம்பவத்துக்கு காரணம் என ஆரம்பகட்ட விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது என்றனர்.

# நிறைவேற்று அதிகாரத்தின் கையில் தவழும் துணிச்சலான முடிவுகள்

நிறைவேற்று அதிகாரத்தை தன்கையில் வைத்திருக்கும் ஜனாதிபதிக்கு, ஆண்ணொருவரை பெண்ணாகவும், பெண்ணை ஆணாகவும் மாற்றமுடியாது. ஏனைய, அத்தனை அதிகாரங்களும் நிறைவேற்று அதிகாரத்துக்குள் இருக்கிறதென, அரசியலமைப்பை பற்றி வியாக்கியானம் செய்தோர் ஏலவே கூறியிருக்கின்றனர்.

அவ்வப்போது, அந்த அதிகாரங்கள் பாராளுமன்றத்தின் ஊடாக, கூட்டி அல்லது குறைக்கப்பட்டுள்ளன. ஆட்சியதிகாரத்தை தசாப்த காலத்துக்கு தக்கவைத்து கொள்ளும் வகையிலேயே, அரசியலமைப்பில் ஒருசில திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டவர்கள், தங்களுடைய தேர்தல் மேடைகளில், "நான், ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டால், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை முற்றாக ஒழிப்பேன்" என வாய்கூசாமல் சொல்லியிருக்கின்றனர்.

வெற்றியீட்டி, ஆசனத்தில் அமர்ந்ததன் பின்னர், அதிகாரங்களை அதிகரித்துக் கொண்டுள்ளனரே தவிர, குறைத்ததாக இல்லை. பாராளுமன்றத்துக்கான அதிகாரங்களில் கூட, கையை வைக்குமளவுக்கு நிறைவேற்று அதிகார முறைமையில் அவ்வப்போது திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவ்வாறான அதிகாரங்கள் தம் வசமிருந்தாலும், துணிச்சலான முடிவுகளை எடுப்பதில் சிலர் பின்னடித்துள்ளனர். உதாரணமாகக் கூறுவோமாயின், "நாங்கள் நினைத்த விலையிலேயே தின்பண்டங்களை விற்போம்" என, பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் அறிவிப்பு விடுத்த போது, நிறைவேற்று அதிகாரம் உட்பட விடயதானத்துக்குப் பொறுப்பானவர்கள் மௌனம் காத்தனர்.

நாட்டை நிர்வகிப்பதில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ திராணியற்றவராய் இருக்கின்றார். தன்னை ஜனாதிபதியாக்கிய 69 இலட்ச மக்கள், அவர்களின் குடும்பத்தினர், எதிர்த்தரப்புக்கு வாக்களித்த மக்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர் ஆகியோரின் வயிற்றில் புளியைக் கரைத்துவிட்டார். "சேர் பெயில்"," இரண்டு வருடங்கள் பெயிலான சேருக்கு, இன்னும் மூன்று வருடங்களைத் தருவதற்கு மக்கள் தயாரில்லை" உள்ளிட்ட பல விமர்சனங்கள் ஜனாதிபதிக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ளன.

நிறைவேற்று அதிகாரத்தை கையில் வைத்திருக்கும் ஒருவர், திராணியற்றவராக இருக்கமுடியாது. ஆனால், பாராளுமன்றத்தில் அரசாங்கம் பலத்தை இழந்துவிடுமாயின், அதிரடி தீர்மானங்களை எடுக்கும் முன்னர், ஓரிரு தடவைகள் சிந்தித்தே ஆகவேண்டும். ஆனால், சிற்சில முடிவுகளை எடுக்கும் போது, மக்களுக்கு சார்பானதாகவும் இயைந்து போகக்கூடியதாகவும் இருத்தல் அவசியமாகும்.

இவ்வாறான நெருக்குவாரங்களுக்கு மத்தியில் நின்றிருக்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ,"எடுக்க வேண்டிய எந்தக் கடினமான அல்லது துணிச்சலான முடிவுகளை எடுக்க, நான் தயாராக இருக்கிறேன்" என்று கூறியுள்ளார். துணிச்சலான முடிவுகள் வரவேற்கத்தக்கன. ஆனால், அந்த முடிவுகள் மக்களின் வயிற்றில் அடிப்பதாய் இருந்துவிடக்கூடாது.

விட்டுப்பிடிக்க வேண்டிய இடத்தில் விட்டுப்பிடித்து, இறுக்கவேண்டிய இடத்தில் இறுக்க வேண்டும். மக்களுக்கு பெரும் சுமையாக இருக்கும் விலைவாசி அதிகரிப்பு தொடர்பில், ஆகக்கூடிய கவனத்தை செலுத்தி, கடுமையான கட்டளைகளைப் பிறப்பிப்பதற்கும் மீறினால், இதுதான் நடக்குமென்ற படிப்பினையை காண்பிக்கவும் வேண்டும். இல்லையே நிறைவேற்று அதிகாரத்துக்கு பொருள் விளங்காமலே போய்விடும்.

தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

நல்ல அம்சங்களைப் பெற்றுக்கொள்வதற்காகச் சபதம் செய்துகொள்ளலாம். ஆனால், கெட்ட செயல்களைச் செய்யவும் சபதம் செய்கின்றார்கள்.

வாழ்க்கை என்பது யுத்தம் அல்ல! இயல்பாக முறைப்படி மேல் நோக்கி, முன்னேறுவதே வாழ்க்கையாகும். கோபாவேசத்தில், பொறாமையில் மனச்சாட்சி இன்றிப் பிறரைச் சபிப்பது தன்னைத்தான் ஏமாற்றுவதும் தனக்கு மென்மேலும் ஊறுவிளைவிப்பதுமான செயலாகும்.

அன்பான எவரும் எவரையும் தூஷிப்பதுமில்லை; ஆணவத்தின் அதிவேகம் புத்தியை மறைக்கின்றது. இதனால் செய்யும் அடாத செயல்களால், பாவச்சுமைகளின் எடை, கூடிக்கொண்டே வரும்.

அநேகர் சரி, பிழை தெரியாதவர்கள் அல்ல! வேண்டுமென்றே கோபத்தை வரவழைக்கும் நபர்களும் இருக்கின்றார்கள். இதனால் துன்பங்களும் ஆரோக்கியமும் கெட்டு, மனதைப் பாதித்துவிடுகின்றன.

மூர்க்கத்தனமாக இயங்குவது அறவே கூடாத செயல். எத்தனை, எத்தனை நற்காரியங்கள் செய்யவேண்டியுள்ளன. உலகத்துடன் இணைந்து இவற்றைச் செய்தால், நெஞ்சம் மகிழ்ந்துவிடும்; கவலைகள் கருக்கப்பட்டுவிடும். சுறுசுறுப்புடன் வாழ்வார்கள். நற்செயல்கள் வெற்றியின் உச்சதிறன்களை உருவாக்கும்.

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### கண்டாவளை பிரதேசத்தில்

# உவர்நீர் தடுப்பணைக்கு கோரிக்கை

கிளிநொச்சி, கண்டாவளை பிரதேசத்தில் சுமார் 16 கிலோ மீற்றர் வரையான கரையோரப் பகுதிகளில், உவர்நீர்த் தடுப்பணை இன்மையால் பெருமளவான வயல் நிலங்கள், உவர் நிலங்களாக மாறி வருவதாகவும் உவர் நீர்த்தடுப்பணை அமைத்துத் தருமாறும் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கண்டாவளை பிரதேசத்திலுள்ள கரையோரப் பகுதிகளில், ஆரம்ப காலத்தில் இருந்து பயிர்செய்கை மேற்கொள்ளப்பட்டு வந்த காணிகள், இவ்வாறு உவர் நிலங்களாக மாறி இருப்பதாகவும் விவசாயிகள் சுட்டிக்கட்டியுள்ளனர்.

குறித்த பிரதேசத்தில், பல நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்கள் இவ்வாறு உவர் பரம்பலுக்கு உள்ளாகி வருவதாகவும் தங்களுடைய பிரதேசத்தின் கரையோரப் பகுதிகளில் சுமார் 16 கிலோ மீற்றர் நீளமான பகுதி, கடற்கரையோரப் பகுதிகளாக காணப்படுகின்றன என்றும் இப் பகுதிகளுக்கு உவர்நீர்த் தடுப்பணைகளை விரைவாக அமைத்துத் தருமாறும் கோரியுள்ளனர்.

இவ்வாறு, சுமார் 16 கிலோ மீற்றர் நீளமான உவர்நீர்த் தடுப்பணை அமைத்து தருவதற்கு சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் மாவட்ட உயர் நிலை அதிகாரிகளிடம் கண்டாவளை பிரதேச விவசாயிகளால் குறித்த கோரிக்கையானது கடந்த 28ஆம் திகதி மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் முன் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

-யது பாஸ்கரன்

# 'அப்படி எதுவும் நடக்காது'

மொஹமட் பாதுஷா

இரு பிரதான முஸ்லிம் கட்சிகள் சார்பான முஸ்லிம் எம்.பிக்கள் ஒன்றிணைந்து, ஒரு கூட்டணியை உருவாக்கத் திட்டமிட்டுள்ளதாக, தகவலொன்று இப்போது உலாவ விடப்பட்டுள்ளது. இவர்கள் ஆளும் தரப்புக்கு ஆதரவளிக்கப் போவதாக அல்லது, அதற்காகவே இந்தக் கூட்டணி உருவாக்கப்படப் போவதாகவும் கூறப்படுகின்றது.

முஸ்லிம் அரசியல் பெருவெளியில், 'முஸ்லிம் கட்சிகளின் கூட்டணி', 'முஸ்லிம் கூட்டமைப்பு', 'தமிழ்-முஸ்லிம் கூட்டமைப்பு' என்ற கருத்தியல்கள் நீண்டகாலமாவே பேசப்பட்டு வருகின்றன. சிலவேளைகளில் இதற்கான முயற்சிகளும் எடுக்கப்பட்டன.

ஆனால், 'தண்ணீருக்கு ஒன்றும் தவிட்டுக்கு ஒன்றும் ஓடுகின்ற' அரசியல்வாதிகளாலும், எல்லோருக்கும் பதவியும் பணமும் தேவைப்பட்டதாலும், மேற்சொன்ன எல்லாக் கூட்டணிகளும், தேர்தல் கூட்டுகளாகவும் அரசியல் கூத்துகளாகவும்தான் இருந்தன.

அதைவிடுத்து, இவற்றால் முஸ்லிம் சமூகத்துக்கு எந்தவோர் அனுகூலமும் கிடைக்கவில்லை. தலைவர் பதவி, எம்.பி பதவி, அமைச்சுப் பதவி போன்றவற்றுக்கு பின்னால் சென்றுகொண்டு, மக்களின் நல்வாழ்வுக்கான அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கு முன்னுரிமை கொடுக்காமல், சமூகத்துக்காகச் சிந்திக்காத வரை, முஸ்லிம் சமூகத்துக்கு நன்மைகள் கிடைக்கப் போவதும் இல்லை என்பதே யதார்த்தமாகும்.

இந்தச் சூழலிலேயே, இப்போது முஸ்லிம் காங்கிரஸையும் மக்கள் காங்கிரஸையும் உள்ளடக்கியதாக, கூட்டணியை உருவாக்க முஸ்தீபுகள் நடப்பதாக, செய்தி வெளியாகியிருக்கின்றது. ஆனால், விசாரித்துப் பார்த்ததில், அதனை உறுதிப்படுத்த முடியவில்லை.

உண்மையில், முஸ்லிம் கட்சிகளுக்கு இடையில், மக்கள் எதிர்பார்க்கும் விதத்திலான கூட்டணி உருவாவதற்கான சாத்தியம் இல்லை. அப்படி அமைந்தாலும், ஒரு வருடம் அல்லது அடுத்த தேர்தலோடு அது முடிந்து விடும்.

ஆனால், அதற்கான முயற்சிகள் நடப்பதற்கு நிறையவே வாய்ப்புள்ளன; காரண காரியங்களும் உள்ளன. இதைப் புரிந்து கொள்வதற்கு, இன்றைய அரசியல் சூழலைக் கவனமாக நோக்க வேண்டியுள்ளது.

அரசாங்கம், கடுமையான ஆளுகைசார் தோல்விகளைச் சந்தித்துள்ளது மட்டுமன்றி, உள்ளக முரண்பாடுகளும் உச்சத்தைத் தொட்டுள்ளன. ஏற்கெனவே முஸ்லிம் காங்கிரஸ், மக்கள் காங்கிரஸின் உறுப்பினர்களான எம்.பிக்கள் 20ஆவது திருத்தத்துக்கு ஆதரவளித்தது முதற்கொண்டு, தொடர்ந்தும் அரசாங்கத்துடனேயே இருக்கின்றனர்.

இவ்விரு கட்சிகளின் எம்.பிக்களில் (தலைவர்கள் உட்பட) ஐந்து பேர் ஐக்கிய மக்கள் சக்தியில் போட்டியிட்டவர்கள். முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் நஸீர் அஹமட்டும் மக்கள் காங்கிரஸ் சார்பில் முசாரப்பும் மட்டுமே அந்தந்தக் கட்சிகளின் நேரடி உறுப்பினர்களாவர்.

இப்போது, இவர்கள் எல்லோருக்கும் எதிராக, தலைவர்களான ஹக்கீமும் ரிஷாட்டும், ஒழுக்காற்று நடவடிக்கையை, ஆமை வேகத்தில் எடுத்துள்ளனர்; அல்லது, அவ்வாறான 'படம்' ஒன்றைக் காட்டுகின்றனர்.

சமகாலத்தில், முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம், மக்கள் காங்கிரஸ் சார்பாக அதன் தவிசாளர் எம்.எஸ்.எஸ். அமீர்அலி ஆகியோர், தமிழ்க் கட்சிகள் நடத்தி வருகின்ற சந்திப்புகளில் பங்கேற்றுள்ளனர்.

இந்தியா ஊடாக இலங்கைக்கு அழுத்தம் கொடுக்கும் பொது ஆவணத்தில், முஸ்லிம் கட்சிகளும் ஒப்பமிடப் போவதாக ஆரம்பத்தில் தெரிவிக்கப்பட்டது. ஆயினும், முஸ்லிம்களின் அபிலாஷைகள் உள்ளடக்கப்பட்டிராத ஓர் ஆவணத்தில், முஸ்லிம் கட்சிகள் ஒப்பமிட முடியாது.

அதன்படி, இரு முஸ்லிம் கட்சிகளும் இதில் ஒப்பிடுவதற்குத் தடுமாறுவதுடன், சற்றுக் காலம் தள்ளிவைத்து, அதுபற்றி மீள் பரிசீலனை செய்யவுள்ளதாகவும் தெரிகின்றது. முஸ்லிம் கட்சித் தலைவர்கள் ஒப்பமிடவில்லை என்றால் கூட, தமிழ்க் கட்சிகளுடன் ஒன்றிணைந்திருப்பது பெருந்தேசியத்துக்கு மகிழ்ச்சியான செய்தியல்ல என்பது, இவ்விடத்தில் நினைவு கொள்ளத்தக்கது.

இந்த வேளையிலேயே, முஸ்லிம் கட்சிகளின் எம்.பிக்கள் ஒன்றிணைந்து, ஒரு கூட்டணியை அமைக்கப் போவதாக கதையொன்று உலாவுகின்றது. உண்மையில், அதற்கான முயற்சிகள் நடக்கலாம்; அல்லது, மேற்குறிப்பிட்ட களச் சூழலைக் குழப்புவதற்காகத் திட்டமிட்டுக் கிளப்பி விடப்பட்ட ஒரு புனைகதையாகவும் இருக்க வாய்ப்புண்டு.

முஸ்லிம் காங்கிரஸ், மக்கள் காங்கிரஸ் ஆகிய கட்சிகளின் அரசியல்வாதிகள் கீரியும் பாம்புமாக இருப்பார்கள். ஆனால், தேசிய முக்கியத்துவம்மிக்க விவகாரங்களில் ஹக்கீமும் ரிஷாட்டும் கிட்டத்தட்ட ஒருமித்த நிலைப்பாட்டையே எடுத்து வருவதைக் காண முடிகின்றது.

அதுபோல, தலைவர்கள் தவிர்த்த ஏனைய ஐந்து எம்.பிக்களும் அரசாங்கத்துக்கு 'கூஜா' தூக்கும் விடயத்தில், இப்போது ஒருமித்த நிகழ்ச்சி நிரலிலேயே இயங்குவதாகவும் தெரிகின்றது. இரண்டு கட்சிகளைச் சார்ந்தவர்களிடையே ஒரு 'நிழல் கூட்டணி' இயங்கிக் கொண்டு இருப்பதாகவும் சொல்ல முடியும்.

அத்துடன், எம்.பிக்களில் ஆத்திரமடைந்து, அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப் போவதான ஒரு தோற்றப்பாட்டை தலைவர்கள் ஏற்படுத்தி இருந்தாலும், திரைமறைவில் எல்லோரும் ஒரு குடையின் கீழ்தான் இருக்கின்றார்கள்.

இவ்வாறான சூழ்நிலையில், இவ்விரு முஸ்லிம் கட்சிகளும் இணைந்து, ஒரு கூட்டணியை அமைக்கத்தான் வேண்டும் என்பதில்லை. அவ்வாறு அமைத்தாலும், அது நிச்சயமாக சமூகம் சார்ந்ததாக இருக்க மாட்டாது. முட்டுக் கொடுத்துவிட்டு, கிடைப்பதை சுருட்டிக் கொள்ளும் ஓர் உத்தியாகவே அமையும்.

ஒரு காலத்தில் ஏட்டிக்குப் போட்டியாக இருந்த தமிழ் ஆயுத மற்றும் அரசியல் இயக்கங்கள், மக்கள் நலனை முன்னிறுத்தி, தமிழ்த் தேசிய கூட்டமைப்பாக இயங்கி வருகின்றன. அவர்களால் தமிழ் மக்களின் அபிலாஷைகளை இன்னும் முழுமையாக நிறைவேற்ற முடியவில்லை என்பது உண்மையே.

இருந்த போதிலும், தமது இனத்தின் பிரச்சினைகளை, விருப்பு வெறுப்புகளை சர்வதேச மயப்படுத்துவதிலும் முன்கொண்டு செல்வதிலும், தமிழ்த் தேசிய கூட்டமைப்பு வெற்றி பெற்று இருக்கின்றது என்றுதான் சொல்ல வேண்டும்.

இதனை முன்மாதிரியாகக் கொண்டு, இதனைவிடவும் சிறப்பான ஒரு கட்டமைப்புடன், முஸ்லிம் அரசியல் அணிகளின் கூட்டமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்ற அவா, முஸ்லிம் சிவில் சமூக செயற்பாட்டாளர்களுக்கும் ஓரீர் ஊடகவியலாளர்களுக்கும், நீண்டகாலமாக இருந்து வருகின்றது.

இதற்கான கருத்தியல் முன்வைப்புகளும் முயற்சிகளும் பல தடவைகள் இடம்பெற்றிருக்கின்றன. இந்த வரிசையில் கடைசியாக, மூன்று வருடங்களுக்கு முன்னர், முஸ்லிம் கட்சிகளை ஒன்றுபடுத்துவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டன.

முஸ்லிம் காங்கிரஸும் தேசிய காங்கிரஸும் இதில் இணைய விரும்பவில்லை. மக்கள் காங்கிரஸ் கட்சி, ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பு என்ற சிறு கட்சியுடன் இணைந்து, ஒரு கூட்டமைப்பை உருவாக்கியது. 'ஐக்கிய மக்கள் கூட்டமைப்பு' என்ற பெயரில் உருவாக்கப்பட்ட இக் கூட்டமைப்பு, ஒரு தேர்தலோடு தூர்ந்து போனது என்பதே நிதர்சனமாகும்.

முஸ்லிம் கட்சிகளை ஓரணியில் கொண்டுவந்து, அதன்மூலம் முஸ்லிம்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு தேட வேண்டும் என்ற தேவை இப்போதும் இருக்கின்றது. ஆனால், முஸ்லிம் அரசியல் அணிகள் ஒன்றுபட வேண்டும் என்ற தீராத ஆசை, மக்களுக்கு இன்னும் நிறைவேறவில்லை.

ஆனால், முஸ்லிம் மக்களும் ஊடகவியலாளர்கள் உள்ளிட்ட சிவில் செயற்பாட்டாளர்களும் எதிர்பார்ப்பது போன்ற, மக்கள் நலனை மையப்படுத்திய கூட்டமைப்போ, கூட்டணியோ சாத்தியமில்லை. அப்படிச் சொல்லித்தான் அவர்கள் ஆரம்பித்தாலும், அப்படி எதுவும் நடக்காது. ஏனெனில், இன்று இருக்கின்ற முஸ்லிம் அரசியல் சூழ்நிலை, அப்படிப்பட்டதாக இருக்கின்றது. முஸ்லிம் மக்களும் அப்படித்தான் இருக்கின்றார்கள்.

முஸ்லிம் சமூகத்தின் அபிலாஷைகள் என்கின்ற ஒரு புள்ளியில், முஸ்லிம் அரசியல்வாதிகள் எல்லோரும் சந்திப்பார்கள் என்றால் மட்டுமே, ஒருமித்த கட்டமைவுடன் செயற்படுவார்கள் என்றால் மாத்திரமே, முஸ்லிம் கூட்டமைப்பு பற்றிச் சிந்திக்கலாம்.

ஆனால், முஸ்லிம் அரசியலில் அதற்கான அறிகுறிகள் எதுவும் கிடையாது. எல்லோருக்கும் தலைவராக, செயலாளராக இருக்க வேண்டும் என்ற வேட்கைதான் உள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர் பதவியும் அதன் ஊடான வருவாய்களும் அவசியமாகியுள்ளன. அமைச்சுப் பதவிகளுக்காக எதையும் செய்யத் தயாராக உள்ளனர்.

மக்களின் பிரச்சினைகள் எக்கேடு கெட்டுப் போனாலும் பரவாயில்லை, தங்களுடைய 'கல்லாப் பெட்டி' நிரம்பியிருக்க வேண்டும். அடுத்த முறையும் எம்.பியாக வரவேண்டும். அதற்காக எந்தப் 'படத்தையும்' காட்டுவதற்கு அவர்கள் தயாராக இருக்கின்றனர்.

தேர்தல் வந்தால், கட்சிப் பாடல்களை ஒலிக்கவிட்டும், உணர்ச்சி அரசியலைப் பேசியும், இனவாதத்தைச் சுட்டிக்காட்டியும் வாக்குகளைக் கொள்ளையடிப்பது எப்படி என்பதை மட்டும், முஸ்லிம் அரசியல்வாதிகள் நன்றாகக் கற்றுக் கொண்டுள்ளனர். மக்கள் கேள்வி கேட்பார்கள் என்ற பயம், அவர்களுக்குக் கிடையவே கிடையாது.

ஆகவே ஒரு விடயம் மட்டும் தெளிவானது!

அதாவது, முஸ்லிம் சமூகத்தின் பிரச்சினைகளைப் பெருந்தேசியத்திடம் ஆட்சியாளர்களிடம் கொண்டு செல்லப் போவதாகக் கூறி, மக்களைப் பேய்க்காட்டி, ஒரு கூட்டு அமைக்கப்படலாமே தவிர, அந்தக் கூட்டு, முஸ்லிம் சமூகத்தின் நலனை முன்னிறுத்திய ஓர் அரசியல் கூட்டமைப்பாக இருக்காது.

அந்தக் கூட்டணி, தமது சொந்தப் பேரம்பேசல்களை மனதில் வைத்துக் கொண்டு செயற்படுமே தவிர, இதன்மூலம் முஸ்லிம் சமூகத்தின் நீண்டகால, குறுங்கால பிரச்சினைகள் எதுவும் தீர்ந்து விடும் என்று நம்பத் தேவையும் இல்லை.

முஸ்லிம்களின் அபிலாஷைகளை முன்னிறுத்திய முஸ்லிம் கூட்டமைப்பு என்பது, நீண்டகாலமாக நிரப்பப்படாத இடைவெளிதான் என்பதை மறுக்கவில்லை.

ஆனால், இன்றைய முஸ்லிம் அரசியல்வாதிகள் பற்றிய மக்களின் பட்டறிவின் பிரகாரம், அப்படியான அபூர்வங்கள் எதுவும் நடப்பதற்கான நிகழ்தகவுகள் இல்லை.

சென்னை:

# பிரதமர் மோடியை தி.மு.க வரவேற்பதில் என்ன தவறு இருக்கிறது?



மாநிலத்தில் வந்து, திட்டங்களைத் தொடக்கி வைக்கும் பிரதமரை எந்த அரசாங்கமும் வேண்டாம் என்று சொல்லாது. இங்கு நமக்கு திட்டங்களின் தேவைக்குதான் அரசு உள்ளது. அரசு என்பது வேறு; கருத்தியல் என்பது வேறு என்று பிரதமரை வரவேற்கும் நிலைப்பாட்டுக்கு கனிமொழி எம்.பி விளக்கம் தந்துள்ளார்.

11 புதிய மருத்துவக் கல்லூரிகளைத் திறந்து வைக்க பிரதமர் மோடி, ஜனவரி 12ஆம் திகதி தமிழகம் வருவதாக அறிவிப்பு வெளியாகியுள்ளது. இதையடுத்து, திராவிட முன்னேற்ற கழகத்தின் (தி.மு.க) அமைப்பு செயலாளரும் மாநிலங்களவை எம்.பியுமான ஆர்.எஸ் பாரதி, ''தமிழகத்துக்கு விருந்தினராக வருகை தரும் மோடிக்கு கறுப்புக் கொடி காட்ட வேண்டிய அவசியமில்லை. தி.மு.க எந்தக் கட்சிக்கும் எதிரியில்லை; நமது கோரிக்கைகளை மத்திய அரசு நிறைவேற்றித் தருவதாக உறுதியளித்துள்ள நிலையில், அவர் இப்போது நமது விருந்தினர்'' என்று கூறியிருந்தார்.

ஆர்.எஸ் பாரதியின் கருத்து, பல்வேறு விமர்சனங்களை ஏற்படுத்தியது. அம்மா மறுமலர்ச்சி முன்னேற்ற கழகத்தின் (அ.ம.மு.க) டிடிவி தினகரன் இதைப்பற்றி கருத்துத் தெரிவித்துருக்கின்றார். ''எதிர்க்கட்சியாக இருந்தால் ஒன்று, ஆளுங்கட்சியான பிறகு வேறொன்று என தி.மு.க போடும் இரட்டை வேடங்கள் அம்பலமாகி வருவதற்கு, இது ஒரு சாட்சி' என்றார்.

இப்போது, வரை பிரதமரை வரவேற்பதில் திமுகவின் நிலைப்பாடு விவாதத்துக்கு உள்ளாகி வருகிறது. இந்நிலையில், கனிமொழி எம்.பி, பிரதமர் மோடியை தி.மு.க அரசாங்கம் ஏன் வரவேற்க வேண்டும் என்பதற்கான விளக்கத்தை அளித்துள்ளார். இதன்போது, "பிரதமர் மோடி, மக்கள் நலத்திட்டங்களை தொடக்கி வைக்க தமிழகம் வருகிறார். இதனை தி.மு.க அரசாங்கம் எதிர்க்கவில்லை. அ.தி.மு.க ஆட்சியில் பிரதமர் மோடி தமிழகம் வந்த போது, தி.மு.க எதிர்த்தது குறித்து கேள்வி எழுப்புகின்றனர். மாநிலத்துக்கு வந்து, திட்டங்களைத் தொடக்கி வைக்கும் பிரதமரை எந்த அரசாங்கமும் வேண்டாம் என்று சொல்லாது. இங்கு நமக்கு திட்டங்களின் தேவைக்குதான் அரசு இருக்கு. அரசு என்பது வேறு; கருத்தியல் என்பது வேறு. அ.தி.மு.க கருத்தியல் ரீதியான முரண்பாடுகள் இருந்தாலும், ஒர் அரசு எப்படி நடந்துக்கொள்ள வேண்டும், மக்களுக்கு எது நல்லது என்பதை கருத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். மத்திய அரசின் அனைத்து செயற்பாடுகளையும் விவசாயிகளுக்கு எதிரான சட்டங்கள், குடியுரிமை சட்டங்கள் போன்ற மத்திய அரசு கொண்டு வந்த மக்களுக்கு எதிரான சட்டங்களை அ.தி.மு.க ஆதரித்தது. தி.மு.க அதனை எதிர்த்தது. எனவே இந்த விவகாரத்தில் தி.மு.க - அ.தி.மு.க ஆட்சியை ஒப்பிட்டு பார்க்க வேண்டாம்" என்று கனிமொழி தெளிவுபடுத்தி உள்ளார்.

சென்னை:

## நேரம் தவறாத சென்னை விமான நிலையம்



2021ஆம் ஆண்டு, நேரம் தவறாது செயற்பட்ட சர்வதேச விமான நிலையங்களில், சென்னை விமான நிலையம் எட்டாவது இடத்தைப் பிடித்துள்ளது.

2020ஆம் ஆண்டு கொரோனா தொற்று பாதிப்பு காரணமாக 36% விமானங்கள் உலகளவில் இரத்துச் செய்யப்பட்டன. 2021ஆம் ஆண்டு தொடக்கத்தில் விமான போக்குவரத்துத்துறை சற்று ஏற்றம் காண ஆரம்பித்தது.

வீழ்ச்சியடைந்துள்ள விமானத்துறையை மேம்படுத்துவதற்காக ஒரு வருடமாக விமான தரவு இணைய நிறுவனமான 'சிரியம்' கணக்கெடுப்பை நடத்தியுள்ளது. விமானப் போக்குவரத்தில் காலதாமதம், விமான நிலையங்களின் செயற்பாடு, விமானத்துக்குள் ஏற்படுத்தப்பட்டுள்ள வசதிகள் போன்றவற்றைக் காரணிகளாகக் கொண்டு, உலகளவில் தரவு கணக்கெடுப்பு நடத்தியது.

அதில், 'காலம் தவறாது' என்னும் பிரிவில், சென்னை விமான நிலையம் தெரிவுசெய்யப்பட்டுள்ளது. சென்னை விமான நிலையம் உலக அளவில் எட்டாவது 'நேரம் தவறாது' விமான நிலையமாக, கணக்கெடுப்பில் தெரியவந்துள்ளது. சென்னை விமான நிலையத்தில் இருந்து இயக்கப்படும் விமானங்கள் 89.32% சரியான நேரத்தில் புறப்படுவதாகவும், வருவதாகவும் கூறப்பட்டுள்ளது. ஜப்பான் நாட்டின் இட்டாமி விமான நிலையம் 96.51% பெற்று முதலிடத்தில் உள்ளது. உலக அளவில் பெரிய விமான நிலையங்கள் என்ற பட்டியலில் முதல் 30 இடத்தில் இந்தியாவில் சென்னை விமான நிலையம் மட்டுமே உள்ளது.




கோவை:

## பூனைக்கு வளைகாப்பு

தங்கள் குடும்பத்தினருக்கு வாரிசைப் பெற்றுக் கொடுக்கும் பெண்களுக்கு, தங்களால் முடிந்த அளவு எளிமையான முறையிலோ அல்லது பிரம்மாண்டமாகவோ உறவினர்களை அழைத்து வளைகாப்பு நடத்தும் வழக்கம் தொன்றுதொட்டு நடைபெற்று வருகிறது. வளைகாப்பின் போது வளையல்கள் அணிவித்து அவர்களுக்குப் பிடித்த உணவு வகைகளைப் பரிமாறுவது தமிழ்நாட்டில் பாரம்பரியமான வழக்கங்களில் ஒன்று.

கோயம்புத்தூர் அருகே வேலாண்டிபாளையம் பகுதியைச் சேர்ந்த உமா மகேஷ் சுபா தம்பதியினர் இரண்டு பூனைகள் வளர்த்து வருகின்றனர். வெளிநாட்டு வகையான பிரசியன் பூனைகளுக்கு 'ஜிரா', 'ஐரிஸ்' எனப் பெயரிட்டு தங்கள் சொந்தக் குழந்தைகளைப் போல வளர்த்து வந்தனர்.

இந்த நிலையில், கடந்த சில நாள்களுக்கு முன்பு, பூனைகளின் வயிறு பெரிதாக ஆனதால் கால்நடை மருத்துவரிடம் கொண்டு சென்று பரிசோதித்தனர். அப்போது அவை கர்ப்பமாக இருப்பதாக மருத்துவர்கள் கூறியுள்ளனர். இதையடுத்து மகிழ்ச்சி அடைந்த தம்பதியினர், பூனைகளுக்கு வளைகாப்பு செய்ய வேண்டும் எனத் திட்டமிட்டனர்.

இந்த நிலையில், ஆர்எஸ் புரம் பகுதியில் அமைந்துள்ள செல்லப்பிராணிகள் வளர்ப்பு நிலையத்தில் வைத்து, அந்தப் பூனைகளுக்கு வளைகாப்பு நடத்தினர். பூனைகளை அலங்கரித்து, வளையல்கள் அணிவித்து, கேக் வெட்டி, இனிப்புகள் கொடுத்து வளைகாப்பு நிகழ்ச்சியை நடத்தினர். பூனைகளுக்கு சிறப்பாக தனியான ஆடைகளை தயாரித்து, மாலை அணிவித்து கழுத்தில் மணி கட்டி, இந்த வளைகாப்பு நிகழ்ச்சி கொண்டாடப்பட்டது.

மனிதர்களை மனிதர்களே மதிக்காத நிலையில், தங்கள் வளர்க்கும் செல்லப் பிராணிகளான பூனைகளுக்கு வளைகாப்பு நடத்திய கோவை தம்பதியினருக்கு சமூகவலைத் தளங்களில் பாராட்டுகளும் பூனைகளுக்கு வாழ்த்துகளும் குவிந்து வருகின்றன.



இராமநாதபுரம்:

## காதில் பூ சுற்றி...

மன்னார் வளைகுடா கடல் பகுதி கரையோரத்தில் மீன் பிடிக்கும் விசைப் படகுகளைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்கவும் தடை செய்யப்பட்ட இரட்டை மடி வலைகளைப் பயன்படுத்தி மீன் பிடிக்கும் விசைப்படகுகள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியும் கடல்சார் தொழிலாளர் சங்கத்தினர் காதில் பூ சுற்றிய படி இராமநாதபுரம் கலெக்டர் அலுவலகத்தில் நேற்று (03) மனு கொடுத்தனர்.

அசாம்

## குடும்பத்தினருடன் நேரம் செலவிட சிறப்பு விடுமுறை

அசாம் மாநிலத்தில் குடும்பத்தினருடன் நேரத்தை செலவிட ஏதுவாக, அரச ஊழியர்களுக்கு இரண்டு நாள்கள் சிறப்பு விடுப்பு வழங்கப்படுவதாக அம்மாநில முதலமைச்சர் அறிவித்துள்ளார்.

ஜனவரி ஆறு, ஏழு ஆகிய திகதிகளில் அரச உயரதிகாரிகள் முதல் கடைநிலை ஊழியர்கள் வரை அனைவருக்கும் சிறப்பு விடுமுறை வழங்குவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சிறப்பு விடுப்பு நாள்களில் பெற்றோர், மாமனார், மாமியார் உள்ளிட்ட குடும்பத்தினருடன் நேரத்தைச் செலவிட, இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

# தவறான அழைப்பு





"துருவங்கள் பதினாறு" திரைப்படத்தின் மூலம் அறிமுகமானவர் நடிகை யாஷிகா ஆனந்த். பின்னர் "இருட்டு அறையில் முரட்டு குத்து" திரைப்படத்தில் நடித்து பிரபலமானார்.

தொடர்ந்து பிக் பாஸ் நிகழ்ச்சியின் மூலம் தமிழ் மக்கள் மத்தியில் இன்னும் பிரபலமானார். பிக் பாஸ் நிகழ்ச்சியில் பங்கேற்று இருந்தாலும், பெரிதளவில் இவருக்கு திரைப்பட வாய்ப்புகள் வரவில்லை.

சில மாதங்களுக்கு முன்பு யாஷிகா சென்ற கார் விபத்துக்கு உள்ளாகி யாஷிகாவின் தோழி உயிரிழந்தார். இந்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

பின்னர் யாஷிகாவுக்கு சத்திரசிகிச்சை எல்லாம் முடிந்து தற்போது கொஞ்சம் கொஞ்சமாக குணமடைந்துவிட்டார். மேலும் தற்போது திரைப்படங்களிலும் நடிக்க ஆரம்பித்துள்ளார்.



## அஜித் போட்ட கண்டிஷன்



எச்.வினோத்தின் இயக்கத்தில் நான்காவதாக உருவாகி வரும் திரைப்படம் "வலிமை". இதற்கு முன் இவருடைய இயக்கத்தில் உருவான "சதுரங்க வேட்டை, தீரன், நேர்கொண்ட பார்வை" ஆகிய திரைப்படங்கள் வெற்றியடைந்திருந்தன.

இதனை தொடர்ந்து மிகப்பெரிய எதிர்பார்ப்பில் உருவாகி இருக்கும் "வலிமை", வரும் ஜனவரி 13ஆம் திகதி உலகம் முழுவதும் வெளியாகவுள்ளது.

அண்மையில், வெளிவந்த டிரைலர் கோடிக்கணக்கில் பார்வையாளர்களை பெற்று சாதனை படைத்து வருகிறது. இந்த நிலையில், வலிமை திரைப்படத்தின் கதையை கேட்டு முடித்தவுடன் நடிகர் அஜித் சில கண்டிஷன்களை போட்டாராம்.

அதாவது, "வலிமை" திரைப்படத்தில் பொலிஸார் அனைவரும் மோசமானவர்கள் என்பது போன்று சித்தரிக்கும் காட்சிகள் இடம்பெறக்கூடாது. அதோடு, அரசியல் குறித்த சர்ச்சையான காட்சிகளோ, தனி மனித தாக்குதலோ இருக்கக்கூடாது என்றும் சொல்லி விட்டாராம் அஜித்.



## வாழ்த்து மழையில் காஜல்

"நான் மகான் அல்ல' திரைப்படத்துக்கு பிறகு ரசிகர்களை கவர்ந்த காஜல் அகர்வால், அதன்பின் "மாற்றான், துப்பாக்கி, மாரி" போன்ற திரைப்படங்களில் முன்னணி நடிகர்களுடன் நடித்து தனக்கென தனி ரசிகர் பட்டாளத்தையே உருவாக்கினார்.

தொழிலதிபர் கௌதம் கிச்சலுவை கடந்தாண்டு காதல் திருமணம் செய்து கொண்ட நடிகை காஜல் அகர்வால், திருமணத்துக்கு பிறகும் திரைப்படங்களில் பிசியாக நடித்து வருகிறார்.

தற்போது இவர் கைவசம் "பாரிஸ் பாரிஸ், கோஸ்டி, ஹேய் சினாமிகா", கமலுடன் "இந்தியன் 2", தெலுங்கில் சிரஞ்சீவிக்கு ஜோடியாக "ஆச்சார்யா" ஆகிய திரைப்படங்கள் உள்ளன.

இந்த நிலையில், காஜல் அகர்வால் தற்போது கர்ப்பமடைந்துள்ள தகவலை அவருடைய கணவர் கௌதம் கிச்சலு சமூக வலைத்தளத்தில் தெரிவித்துள்ளார். இதனையடுத்து, இவர்களுக்கு பல்வேறு தரப்பில் இருந்தும் வாழ்த்துக்கள் குவிந்து வருகின்றன.



## அடுத்தடுத்து அறிவிப்பு

விஷால் நடிப்பில் தற்போது "வீரமே வாகை சூடும்" திரைப்படம் உருவாகி வருகிறது. புதுமுக இயக்குநர் து.ப.சரவணன் இயக்கி உள்ளார்.

விஷாலுக்கு ஜோடியாக நடிகை டிம்பிள் ஹயாத்தி நடித்துள்ளார். மேலும் நகைச்சுவை கதாபாத்திரத்தில் யோகிபாபுவும், மலையாள நடிகர் பாபுராஜ் வில்லனாகவும் நடித்துள்ளனர்.

நடிகர் விஷால் தனது சொந்த தயாரிப்பு நிறுவனமான விஷால் பிலிம் பேக்டரி மூலம் தயாரிக்கிறார். விறுவிறுப்பாக நடைபெற்று வந்த படப்பிடிப்பு தற்போது முழுவதுமாக நிறைவடைந்து விட்டதாக நடிகர் விஷால் அறிவித்து இருக்கிறார்.

மேலும் இரண்டாம் சிங்கிள் பாடலை யுவன் சங்கர் ராஜா பாடியிருப்பதாகவும், விரைவில் அந்த பாடல் வெளியாகும் என்றும் விஷால் தனது சமூக வலைத்தள பக்கத்தில் அறிவித்து இருக்கிறார்.

## பிரபல நடிகைக்கு கொரோனா



ஹிந்தி திரையுலகில் முக்கிய நடிகையாக வலம் வந்து கொண்டிருப்பவர் முர்னல் தாகூர். மராட்டியத்தை சேர்ந்த இவர் ஹிந்தி, மராத்தி போன்ற பல்வேறு மொழி திரைப்படங்களில் நடித்துள்ளார்.

இந்த நிலையில், நடிகை முர்னலுக்கு நேற்று கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ள தகவலை அவருடைய சமூக வலைதளத்தில் பதிவு செய்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அந்த பதிவில், "எனக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்ப ட்டுள்ளது. தற்போது வரை லேசான அறிகுறியுடன் தொற்று உறுதியாகியு ள்ளது. நான் நலமுடன் உள்ளேன். நான் தனிமை ப்படுத்தி க்கொண்டுள்ளேன். டொக்டர்கள் தெரிவித்த அறிவுறுத்தல்களை நான் கடைபிடித்து வருகின்றேன். என்னுடன் தொடர்பில் இருந்த நபர்கள் விரைவில் கொரோனா பரிசோதனை செய்துகொள்ள வேண்டும். அனைவரும் கவனமாக இருங்கள்" என பதிவிட்டுள்ளார்.

### இங்கிலாந்து பிரிமியர் லீக்:

# சமநிலையில் செல்சி லிவர்பூல் போட்டி

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான பிரீமியர் லீக் தொடரில், செல்சியின் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அவ்வணிக்கும், லிவர்பூலுக்கும் இடையிலான போட்டியானது 2-2 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.



செல்சி சார்பாக, மட்டியோ கொவாசிச், கிறிஸ்டியன் புலிசிச் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். லிவர்பூல் சார்பாக, சாடியோ மனே, மொஹமட் சாலா ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

இதேவேளை, எவெர்ற்றனின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 3-2 என்ற கோல் கணக்கில் பிறைட்டன் அன்ட் ஹொவ் அல்பியன் வென்றது. எவெர்ற்றன் சார்பாகப் பெறப்பட்ட இரண்டு கோல்களையும் அந்தோனி கொர்டன் பெற்றதோடு, பிறைட்டன் சார்பாக அலெக்ஸிஸ் மக் அலிஸ்டர் இரண்டு கோல்களையும், டான் பேர்ண் ஒரு கோலையும் பெற்றனர்.

பிறீமியர் லீக் புள்ளிகள் பட்டியலில் 53 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் நடப்புச் சம்பியன்கள் மன்செஸ்டர் சிற்றி காணப்படுவதுடன், 43 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் செல்சி காணப்படுகின்றது. ஒரு போட்டி குறைவாக விளையாடியுள்ள லிவர்பூலும், ஆர்சனலும் முறையே 42, 35 புள்ளிகளுடன் மூன்றாம், நான்காமிடங்களில் காணப்படுகின்றன.


### ஸ்பானிய லா லிகா தொடர்:

# கெட்டாபேயிடம் தோற்ற றியல் மட்ரிட்

ஸ்பானிய கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான லா லிகா தொடரில், கெட்டாபேயின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 0-1 என்ற கோல் கணக்கில் றியல் மட்ரிட் தோற்றது.

கெட்டாபே சார்பாகப் பெறப்பட்ட கோலை எனெஸ் உனல் பெற்றார்.

லா லிகா புள்ளிகள் பட்டியலில் 46 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் மட்ரிட் உள்ளது. இரண்டு போட்டிகள் குறைவாக விளையாடியுள்ள செவிய்யா 38 புள்ளிகளுடன் இரண்டாமிடத்திலும், ஒரு போட்டி குறைவாக விளையாடியுள்ள றியல் பெட்டிஸ் 33 புள்ளிகளுடன் மூன்றாமிடத்திலும், ஒரு போட்டி குறைவாக விளையாடியுள்ள அத்லெட்டிகோ மட்ரிட் 32 புள்ளிகளுடன் நான்காமிடத்திலும் உள்ளன.





### நாளை ஆரம்பிக்கிறது நான்காவது டெஸ்ட்:

## அவுஸ்திரேலியாவுக்கு சவால் அளிக்குமா இங்கிலாந்து?

அவுஸ்திரேலிய, இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான நான்காவது ஆஷஸ் டெஸ்ட் போட்டியானது, சிட்னியில் இலங்கை நேரப்படி நாளை அதிகாலை 5 மணிக்கு ஆரம்பிக்கவுள்ளது.

ஐந்து போட்டிகள் கொண்ட இத்தொடரில், முதல் மூன்று போட்டிகளிலும் தோல்வியைத் தளுவி தொடரை இழந்துள்ள இங்கிலாந்து, அவுஸ்திரேலியாவுக்கு சவால் அளிப்பதற்கே மேம்பட்ட பெறுபேறுகளை வெளிப்படுத்த வேண்டியுள்ளது.

அந்தவகையில், இங்கிலாந்து அணியில் ஹசீப் ஹமீட், ஒலி றொபின்ஸனை றோறி பேர்ண்ஸ், ஸ்டுவர்ட் ப்ரோட் பிரதியிடுவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

எவ்வாறாயினும், உப அணித்தலைவர் பென் ஸ்டோக்ஸ், ஜொஸ் பட்லர் ஆகியோரிடத்திடமிருந்து மேம்பட்ட பெறுபேறுகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

மறுப்பக்கமாக அவுஸ்திரேலிய அணியில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான ட்ரெவிஸ் ஹெட்டை உஸ்மான் கவாஜாவைப் பிரதியிடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

### நியூசிலாந்துக்கு எதிரான முதலாவது டெஸ்டில்

# முன்னிலை பெற்ற பங்களாதேஷ்

நியூசிலாந்துக்கு எதிரான முதலாவது டெஸ்டில் பங்களாதேஷ் முன்னிலை பெற்றுள்ளது.

இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடரில், மௌண்ட் மகட்டரேயில் கடந்த சனிக்கிழமை ஆரம்பித்த இப்போட்டியின் நேற்றைய மூன்றாம் நாளை தமது முதலாவது 2 விக்கெட்டுகளை இழந்து 175 ஓட்டங்களைப் பெற்றவாறு ஆரம்பித்த பங்களாதேஷ், ஆரம்பத்திலேயே 78 ஓட்டங்களுடன் மஹ்முடுல் ஹஸன் ஜோயை 78 ஓட்டங்களுடன் நீல் வக்னரிடம் இழந்தது.

குறிப்பிட்ட நேரத்தில் ட்ரெண்ட் போல்டிடம் முஷ்பிக்கூர் ரஹீமும் வீழ்ந்தபோதும், அணித்தலைவர் மொமினுல் ஹக், லிட்டன் தாஸின் இணைப்பில் இனிங்ஸை பங்களாதேஷ் கட்டியெழுப்பியது.

பின்னர் 88, 86 ஓட்டங்களுடன் சிறிய இடைவேளைகளில் ஹக்கும், தாஸும் போல்டிடம் வீழ்ந்த நிலையில், நேற்றைய மூன்றாம் நாள் முடிவில் 6 விக்கெட்டுகளை இழந்து 401 ஓட்டங்களை தமது முதலாவது இனிங்ஸில் பங்களாதேஷ் பெற்றுள்ளது.

தற்போது களத்தில், மெஹிடி ஹஸன் மிராஸ் 20, யாசிர் அலி 11 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதுள்ளனர்.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: பங்களாதேஷ்

நியூசிலாந்து: 328/10 (துடுப்பாட்டம்: டெவோன் கொன்வே 122, ஹென்றி நிக்கொல்ஸ் 75, வில் யங்க் 52, றொஸ் டெய்லர் 31 ஓட்டங்கள். பந்துவீச்சு: ஷொரிஃபுல் இஸ்லாம் 3/69, மெஹிடி ஹஸன் மிராஸ் 3/86, மொமினுல் ஹக் 2/6, எபொடொட் ஹொஸைன் 1/75)

பங்களாதேஷ்: 401/6 (துடுப்பாட்டம்: மொமினுல் ஹக் 88, லிட்டன் தாஸ் 86, மஹ்முடுல் ஹஸன் றோய் 78, நஜ்முல் ஹொஸைன் ஷன்டோ 64 ஓட்டங்கள். பந்துவீச்சு: ட்ரெண்ட் போல்ட் 3/61, நீல் வக்னர் 3/98)




### அமெரிக்கா

### 18 பேரைத் தாக்கிய விவகாரம்

# அணிலுக்கு மரண தண்டனை

சாம்பல் நிற அணிலொன்று 2 நாள்களில் 18 பேரைக் தாக்கிய சம்பவம் அண்மையில் பிரித்தானியாவில் இடம்பெற்றுள்ளது.

பிரித்தானியாவில் பக்லி என்ற பகுதியில் உள்ள, 'ஸ்ட்ரைப்' என அழைக்கப்படும் அணிலொன்றே இவ்வாறு 18 பேரைத் தாக்கியுள்ளது. இவ்வகையான சாம்பல் நிற அணிகள் மிகவும் ஆக்ரோஷமானவை என அந்நாட்டின் பூச்சி கட்டுப்பாட்டு சங்கம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் குறித்த அணிலின் தாக்குதலுக்கு உள்ளான நபர் ஒருவர் இது குறித்த புகைப்படங்களை தனது சமூக வலைதளப் பக்கத்தில் பதிவேற்றிய நிலையில் அப் புகைப்படங்கள் வைரலானது.

இதனையடுத்து அப்பகுதி மக்களின் நலன் கருதி குறித்த அணில் கால்நடை மருத்துவர் ஒருவரால் கருணைக் கொலை செய்யப்பட்டுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



### அல்ஜீரியா

# 35 ஆண்டுகளாக வயிற்றில் குழந்தையை சுமந்த மூதாட்டி

73 வயதான மூதாட்டியொருவர் கடந்த 35 வருடங்களாக வயிற்றில் குழந்தையொன்றை சுமந்து வந்த சம்வம் அல்ஜிரியாவில் இடம்பெற்றுள்ளது.

அல்ஜீரியாவின் ஸ்கிக்டா பகுதியைச் சேர்ந்த குறித்த மூதாட்டி அண்மையில் கடும் வயிற்று வலி காரணமாக வைத்தியசாலையொன்றில் அனுமதிக்கப்பட்டார்.

இதன் போது அவரது வயிற்றை பரிசோதித்த வைத்தியர்கள் அவரது வயிற்றில் 3 கிலோ கிராம் நிறை கொண்ட 7 மாதங்களான கல் குழந்தையொன்றைக் கண்டு அதிர்ச்சியடைந்துள்ளனர்.

மேலும் இக்குழந்தையானது கடந்த 35 ஆண்டுகளாக அவரது வயிற்றில் இருந்துள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து அவரது வயிற்றில் இருந்து குறித்த குழந்தையை மருத்துவர்கள் வெற்றிகரமாக அறுவை சிகிச்சை செய்து அகற்றியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இந்நிலையில் இது குறித்துக் கருத்துத் தெரிவித்த வைத்தியர்கள் இந்நோயானது லித்தோபீடியன் என அழைக்கப்படுவதாகவும், கருவானது கருப்பையில் வளராமல் அடிவயிற்றில் வளர்வதால் குழந்தைக்கு இரத்த ஓட்டம் செல்லாமல் கரு வெளியேற வழியில்லாமல் அங்கேயே தங்கிவிடுவதால் இந்நிலைமை ஏற்படுவதாகவும் தெரிவித்துள்ளனர்.

### குவைத்

# வெளிநாட்டவர்கள் 50 பேரை தினமும் வெளியேற்றும் நாடு

குவைத்தில் தினமும் வெளிநாட்டவர்கள் 50 பேர் நாடு கடத்தப்படுவதாகத் அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இது குறித்து அந்நாட்டு உட்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், கடந்த ஆண்டு மாத்திரம் குவைத்தில் இருந்து வெளிநாட்டவர்கள் 18,221 பேர் நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

மேலும் மாதத்திற்கு 1,518 பேர் வரை நாடு கடத்தப்படுகின்றனர். அத்துடன் கடந்த ஆண்டு மாத்திரம் 11,177 ஆண்கள் மற்றும் 7,044 பெண்கள் நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

காலாவதியான இருப்பிட சான்றிதழ்களை உபயோகித்து சட்டவிரோதமாக வசிப்பவர்களே பெரும்பாலும் இவ்வாறு நாடு கடத்தப்படுகிறார்கள்.

குற்றச்செயல்களில் ஈடுபடுவோர், தற்கொலைக்கு முயன்றோர், ஊரடங்கு விதிகளை மீறியோரும் கடந்த ஆண்டு நாடு கடத்தப்பட்டுள்ளனர். அத்துடன் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடும் வெளிநாட்டவர்கள், நாட்டின் பொதுநலன் மற்றும் பாதுகாப்பிற்கு தீங்கு விளைவிக்கும் நடத்தை கொண்டவர்களாகக் கருதப்பட்டு நாடு கடத்தப்படுவார்கள்" எனவும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.



### அமெரிக்கா

# அதிர்ஷ்டம் தந்த பால்

அமெரிக்காவில் பால் வாங்க கடைக்குச் சென்றவர் கோடீஸ்வரராக வீடு திரும்பிய சம்பவம் அண்மையில் இடம்பெற்றுள்ளது.

அமெரிக்காவின் வர்ஜினியா மாநிலத்திலுள்ள வடக்கு செஸ்டர்ஃபீல்டை பகுதியைச் சேர்ந்தவர் டென்னிஸ் வில்லோபி.

இவர் அண்மையில் தனது பிள்ளைகளுக்கு பால் வாங்குவதற்காகக் கடைக்குச் சென்றுள்ளார்.

இதன் போது அங்கு எதேச்சையாக அதிர்ஷ்ட இலாபச் சீட்டு ஒன்று விற்பனைக்கு இருப்பதைப் பார்த்த அவர், ஒரு சீட்டை வாங்கிக் கொண்டு வீடு திரும்பியுள்ளார்.

இந்நிலையில் குறித்த அதிர்ஷ்ட இலாபச் சீட்டுக்கு, 10 லட்சம் அமெரிக்க டொலர் பரிசாக விழுந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் குறித்த அதிர்ஷ்ட லாபச் சீட்டில் இத்தொகையை வென்ற இரண்டாவது நபராக டென்னிஸ் உள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.




### அமெரிக்கா

# உயிருக்கு உலை வைத்த மருந்துகள்

## 10 லட்சம் பேர் உயிரிழந்த சோகம்

அமெரிக்காவில் கடந்த 20 வருடங்களில் அளவுக்கு அதிக மருந்துகளை உட்கொண்டதால் சுமார் 10 லட்சம் மக்கள் உயிரிழந்துள்ளதாக அதிர்ச்சித் தகவல் ஒன்று வெளியாகியுள்ளது.

இது குறித்து அந்நாட்டு நோய் கட்டுப்பாட்டுச் சபை வெளியிட்டுள்ள அறிக்கையில், 1999 ஆம் ஆண்டிலிருந்து 2020ஆம் ஆண்டு வரை அதிக அளவு மருந்துகளை உட்கொண்டதால் 9 லட்சத்து 32 ஆயிரத்து 364 மக்கள் உயிரிழந்துள்ளனர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், அமெரிக்காவில் கொரோனா தொற்றால், முதியவர்கள் அதிக பாதிப்புகளை சந்தித்திருந்தாலும், இளைஞர்கள் மற்றும் நடுத்தர வயதுடைய மக்கள் அதிக அளவிலான மருந்துகளை உட்கொண்டதால் அதைவிட அதிக அளவில் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் நாட்டில் தற்போது வரை மொத்தமாக 5 கோடியே 55 லட்சத்து 99 ஆயிரத்து 747 மக்களுக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் அவற்றையும் தாண்டும் வகையில், அளவுக்கு அதிகமான மருந்துகளை உட்கொண்டதால் 10 லட்சம் பேர் உயிரிழந்துள்ளமை அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை, 04 ஜனவரி 2022, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.